நல்லூர் இள நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a News Paper | பக்கங்கள் 06 | விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

## யாழ். மத்திய பஸ்நிலையம் புதிய இடத்தில் அமையும்

யாழ். மாவட்டத்தின் பெரும்பாக நகர உருவாக்கல் திட்டத்திற்கமைய யாழ் மத்திய பஸ் நிலையம் எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் இடமாற்றம் செய்யப்படவுள்ளது யாழ் புகையிரதநிலையத்தின் பின்புறமாக உள்ள ஸ்ரான்லி வீதியை அண்டிய நிலப்பரப்பில் புதிய பஸ் நிலையம் இயங்க உள்ளது. தற்போதைய பஸ் நிலையத்தில் இயங்கிவரும் பயணச் சீட்டு விற்பனை நிலையம் ஆசனப் பதிவு நிலையம் மற்றும் பஸ்வண்டிப் போக்குவரத்துடன் சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலகங்களும் 14 ஆம் திகதி முதல் மேற்படி புதிய இடத்துக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளன. அத்துடன் ஆட்டோ தரிப்பு நிலையம், சைக்கிள் றிச்சோ தரிப்பு நிலையம், ரக்சி தரிப்பு நிலையம் போன்றவையும் இப் புதிய இடத்துக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளன. (6 ஆம் பக்கம் பார்க்க

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | பங்குனி 29 | [11-04-1998] | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 52

## தடுப்புக்காவல் கைதிகளும் தேர்தலில் போட்டி


(கொழும்பு)

மத்திய மாகாண சபைக்காக மலையக மக்கள் முன்னணியின் சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சுயேட்சை வேட்பாளர் பட்டியலில் சிறிலங்கா அரசால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் சிலரின் பெயரும் இ ம்பெற்றுள்ளது

மலையக மக்கள் முன்னணியின் சார்பில் சுயேட்சைக் குழு ஒன்றினால் தாக்கல் செய்யப் பட்டுள்ள இந்த வேட்பாளர் பட்டியலில் மேற்படி முன்னணியின் தலைவரான பெ. சந்திரசேகரன் உபதலைவரான வி.டி. தர்மலிங்கம், செயலாளரான பீ.ஏ. காதர் ஆகியோரின் பெயர்களும் இடம்பெற்றுள்ளது. இவர்கள் மூவரும் கூட்டுப்படைத் தலைமையக குண்டு வெடிப்பு தொடர்பான வழக்கொன்றின் கீழ் சிறிலங்கா அரசினால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

# இடைக்காட்டில் கடும் மோதல்

# இராணுவ முயற்சி முறியடிப்பு



அச்சுவேலியில் நேற்று "புக்காரா" விமானத் தாக்குதலில் பலியான யாழ். செஞ்சிலுவைச்சங்க உபதலைவர் க. புவனேந்திரன்.

## யாழ். செஞ்சிலுவை அதிகாரி புக்காரா தாக்குதலுக்கு பலி

## வல்லை பாலத்தை தகர்க்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

நேற்றுக்காலை பலாலி இராணுவ முகாமின் கிழக்குப்பகுதிக் காவலரண்களிலிருந்து வெளியேறிய இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கடும் சண்டை மூண்டது. சுமார் ஆறு மணித்தியாலங்கள் இடம் பெற்ற இம் மோதலின் போது இராணுவத்திற்கு உதவியாக சிறிலங்கா விமானப்படை விமானங்களும், உலங்குவானூர்திகளும் பலத்த தாக்குதலை மேற்கொண்டன. அத்தோடு இராணுவ முகாமில் இருந்து அகோர எறிகணை வீச்சும் நடத்தப்பட்டது. இருப்பினும் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட உக்கிர தாக்குதலினால் தனது முன்னேறும் முயற்சியை கைவிட்டு இராணுவம் முகாம் திரும்பவேண்டிய நிலை ஏற்பட்டது.

நேற்றுக் காலை 6-30 மணியளவில் இடைக்காட்டுப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ காவலரண்களில் இருந்து ஆறு கவசவாகனங்கள்சகிதம் வெளியேறிய இராணுவத்தினர் கிழக்கு நோக்கி இரண்டு கிலோமீற்றர் முன்னேறினர். இவ் வேளையில், விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம் பெற்றன.


இவ் உக்கிரச் சண்டையின் போது சிறிலங்கா இராணுவத்தினருக்கு உதவியாகபுக்காரா குண்டு வீச்சு விமானங்களும், 'பெல்' உலங்குவானூர்திகளும் தாக்குதலை மேற்கொண்டன. இதே வேளை பலாலி முகாமிலிருந்து பலத்த எறிகணைத் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது.

இப் பீரங்கி மற்றும்குண்டுத் தாக்குதல்கள் வல்லைப் பாலத்தை குறியாகக் கொண்டும் மேற் கொண்டன. இத் தாக்குதலின் போது வல்லை பாலத்தின் மீது ஆர். சி எல் பீரங்கி தாக்குதலும் நடத்தினர். இத் தாக்குதலினால், வல்லைப் பாலமும் குறிப்பிடத் தக்க அளவில் சேதமடைந்தது.

இருப்பினும் புலிகளின் கடுமையான எதிர்தாக்குதலைத் தொடர்ந்து சுமார் 12-30 மணியளவில் இராணுவம் தன் முன்னேறும்முயற்சிகளைக்கைவிட்டு முகாம் திரும்பியது.

இம் மோதலின்போது இராணுவத்தினருக்கு பலத்த சேதங்கள் ஏற்பட்டதாகவும்செய்திகள் தெரிவிக்கின்றன.

## வீரச்சாவு



## அகோர எறிகணை வீச்சு

## விமான குண்டு தாக்கு

### வடமராட்சியில் மூவர் பலி; 5 பேர் காயம்



அச்சுவேலியில் நேற்று "புக்காரா" விமானத் தாக்குதலில் பலியான யாழ். செஞ்சிலுவைச்சங்க உபதலைவர் க. புவனேந்திரன்.

# யாழ். செஞ்சிலுவை அதிகாரி புக்காரா தாக்குதலுக்கு பலி

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை உபதலைவர் கந்தையா புவனேந்திரன் புக்காரா தாக்குதலுக்கு பலியானார்.

நேற்றுக்காலை நடந்த இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்த பத்தமேனிப் பகுதி மக்களுக்கு உடனடிநிவாரணம் வழங்கச் சென்றபோதே மேற்படி சம்பவம் இடம்பெற்றது.

அச்சுவேலிச் சந்தியைத் தாண்டிச் சந்தைப் பகுதியை இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க அம்புலன்ஸ்வண்டி சென்று கொண்டிருந்தபோது அவ்வாகனத்தை நோக்கி ஹெலிகொப்டர் ஒன்று தாக்குதலை மேற்கொண்டது. அப்போது செஞ்சிலுவைச் சீருடையில் இருந்த அனைவரும் அம்புலன்ஸை விட்டு இறங்கி அருகிலிருந்த கடைக் கட்டடப் பகுதியில் பாதுகாப்புத் தேடிக்கொண்டனர். அத்தாக்குதலினால் அம்புலன்ஸ் வாகனம் சேதமடைந்தது.

இதேவேளை இரண்டு புக்காரா விமானங்கள் பரவலான துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டவாறு வந்தன. அவற்றின் தாக்குதல் ஒய்ந்ததும் மறைவிலிருந்து தலையை நீட்டிப்பார்த்த செஞ்சிலுவைச்சங்க உபதலைவரின் கண்ணைத் துளைத்துக்கொண்டு புக்காராவிலிருந்து சுடப்பட்ட குண்டுஒன்றுசென்றது. அதைத் தொடர்ந்து அவரின் கண்ணிலிருந்து இரத்தம் சீறிப்பாய்ந்தது. பின்னர் வாயினூடாகவும், மூக்காலும் இரத்தம் கொப்பளித்த நிலையில் அவ்விடத்திலேயே சரிந்து விழுந்தார். உடனே அருகில்நின்ற செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள் அம்புலன்ஸ் வாகனத்தில் யாழ். போதனாவைத்தியசாலைக்கு அவரை எடுத்து வந்தனர். ஆனால் அவர் அத்தாக்குதலுக்கு இலக்கான இடத்திலேயே பலியானார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## உபதலைவர் மரணம் யழ்.செஞ்சிலுவை கண்டனம்

[யாழ்ப்பாணம்]

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் உபதலைவர் திரு. க. புவனேந்திரனின் மரணம் தொடர்பாக இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை கூட்டுப்படைத் தலைமை அலுவலகத்திற்கு கண்டன அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

இவ் அறிக்கை நேற்றுமாலை சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையூடாக அனுப்பி வைக்கப்பட்டது. இதேவேளை சர்வதேச செஞ்சிலுவை சங்க யாழ். கிளையும் இது தொடர்பாக கொழும்பு தலைமையலுவலகத்திற்கு அறிவித்துள்ளது. இவ் விடயம் ஜெனீவாவிற்கும் அறிவிக்கப்படும் எனத் தெரிய வருகிறது.

மேலும் இச்சம்பவம் தொடர்பாக கொழும்பில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் கூட்டுப்படைகள் தலைமை அலுவலகத்திற்கு நேரில் சென்று தங்களுடைய கண்டனங்களைத் தெரிவிப்பார்கள் என எதிர்பார்பார்க்கப் படுகின்றது. [நி], [பா]

## செஞ்சிலுவை பிரதிநிதிகள் மாதகல் பகுதி விஜயம்

(யாழ்ப்பாணம்)

இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்கு சர்வதேச செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகள்மூவர் விஜயத்தை மேற்கொண்டுள்ளனர்.

மாதகல், இளவாலைப் பகுதிகளுக்கு நேற்று முன்தினம் இப்பிரதிநிதிகள் மூன்றுநாள் விஜயமொன்றை மேற்கொண்டுள்ளனர் இவர்களில் மருத்துவப் பிரதிநிதியும், சமுக தொடர்பு பிரதிநிதிகளும் உள்ளடங்குகின்றனர்.

இப்பகுதிகளின் மருத்துவ நிலையை அறியவும், புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசங்களுக்கு வருபவர்கள் தொடர்பான விபரங்களைப் பெறவும், அவர்களை இங்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கையை எடுக்கவுமே இவர்கள் அங்கு சென்றிருப்பதாகத் தெரியவருகிறது. (நி)

## மானிப்பாய் இந்துவில் மாவீரருக்கு இறுதி அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

மணலாறில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட மினிமுகாம் தகர்ப்பின் போது வீரச்சாவடைந்த லெப். கலைக்கோன் - ஜெயந்தன் (ஜெயக்கொடி ஜெயரூபன் உரும்பராய் மேற்கு, உரும்பராய்) லெப் தொல்காப்பியன் - சூரி (சுப்பிரமணியம் சோமசுந்தரம் இல. 82, இரண்டாம் கட்டை நல்லூர்), 2-ம் லெப். குந்தவி (செல்லத்துரை விஜயலட்சுமிவட்டுக்கோடை கிழக்கு சித்தன்கேணி) மற்றும் நேற்று இடைக்காட்டுப் பகுதி காவலரணிலிருந்து முன்னேறி வந்த இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவடைந்த கப்டன் நீலவண்ணன் - இம்ரான் அருளையா செந்தில் ராஜ், சுதுமலை வீதி, மானிப்பாய்] ஆகிய நான்கு மாவீரர்களினதும் புகழுடல்கள் இன்று மாலை 3.00 மணிக்கு மானிப்

(6ஆம் பக்கம் பார்க்க)

நேற்றுக் காலை 6-30 மணியளவில் இடைக்காட்டுப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ காவலரண்களில் இருந்து ஆறு கவசவாகனங்கள்சகிதம் வெளியேறிய இராணுவத்தினர் கிழக்கு நோக்கி இரண்டு கிலோ மீற்றர் முன்னேறினர். இவ் வேளையில், விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம் பெற்றன.

இவ் உக்கிரச் சண்டையின் போது சிறிலங்கா இராணுவத்தினருக்கு உதவியாகபுக்காரா குண்டு வீச்சு விமானங்களும், 'பெல்' உலங்கு வானூர்திகளும் தாக்குதலை மேற்கொண்டன. இதேவேளை பலாலி முகாமிலிருந்து பலத்த எறிகணைத் தாக்குதலும் மேற் கொள்ளப்பட்டது.

இப் பீரங்கி மற்றும்குண்டுத் தாக்குதல்கள் வல்வைப் பாலத்தை குறியாகக் கொண்டும் மேற் கொன்டன. இத் தாக்குதலின் போது வல்லை பாலத்தின் மீது ஆர். சி எல் பீரங்கி தாக்குதலும் நடத்தினர். இத் தாக்குதலினால், வல்லைப் பாலமும் குறிப்பிடத் தக்க அளவில் சேதமடைந்தது.

இருப்பினும் புலிகளின் கடுமையான எதிர்தாக்குதலைத் தொடர்ந்து சுமார் 12-30 மணியளவில் இராணுவம் தன் முன்னேறும்முயற்சிகளைக்கைவிட்டு முகாம் திரும்பியது.

இம் மோதலின்போது இராணுவத்தினருக்கு பலத்த சேதங்கள் ஏற்பட்டதாகவும்செய்திகள் தெரிவிக்கின்றன.

## வீரச்சாவு



கப். நீலவண்ணன் [இம்ரான்]

இடைக்காட்டு பகுதியில் அமைந்துள்ள இராணுவ காவலரண்களிலிருந்து நேற்று வெளியேறிய இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட பெரும் மோதலில் கப்டன் நீலவண்ணன் - இம்ரான் [அருளையா செந்தில் ராஜ் சுதுமலை வீதி, மாணிப்பாய்] என்னும் விடுதலைப் புலிகள் போராளி வீரச்சாவு அடைந்தார் இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.



வீரவேங்கை றொபி (கதிராஜன்)

03-04-93 அன்று மட்டக்களப்பு கிரான் சின்னவேம்பு என்னும் இடத்தில் சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரவேங்கை றொபி- கதிராஜன் [சண்முகம் தோத்திரலிங்கம், சந்திவெளி, முறக்கொட்டாஞ்சேனை] வீரச்சாவு அடைந்தார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# அகோர எறிகணை வீச்சு விமான குண்டு தாக்கு

## வடமராட்சியில் மூவர் பலி; 5 பேர் காயம்

(வடமராட்சி)

வடமராட்சியின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று இடம் பெற்ற சிறிலங்கா படையினரின் தாக்குதலால் மூவர் பலியாகினர். ஐவர் காயமடைந்தனர். நேற்றுக் காலை 6.00 மணிக்கு ஆரம்பித்த இத்தாக்குதல்கள் நண்பகல்வரை நீடித்தது.

இத் தாக்குதலின்போது புக்காரா விமானமும், மற்றும் குண்டுவீச்சு விமானங்கள் உலங்குவானூர்தி என்பன ஈடுபடுத்தப்பட்டதுடன் பலாலி ராணுவ முகாமிலிருந்து பலத்த ஏறிகணை வீச்சும் நடாத்தப்பட்டது இத் தாக்குதல்களினால் 5000க்கு மேற்பட்ட மக்கள் இடம் பெயர்ந்ததுடன் வடமராட்சிக்கான போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டது.

பலாலி இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட எறிகணைகள் மாண்டான், உப்புவெளி, வல்வை, கம்பர்மலை, கொற்றாவத்தை ஆகிய பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன.

இத் தாக்குதல்களால் வல்வைப் பகுதியில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த மீன் வியாபாரி ஒருவரும் மாண்டான் பகுதியில் வீழ்ந்து வெடித்த எறிகணையினால் ஒருவரும் பலியாகினர். கம்பர் மலைப் பகுதியில் வீழ்ந்து வெடித்த எறிகணைக்கு முருகதாஸ் யோகதர்சன்(வயது-15) பரிதாப மரணமடைந்தார். மற்றும் கதிரவேல் செல்வராசா (வயது35) மண்டான், ஜெயராசா (வயது46) கரவெட்டி மத்தி, சீ. சின்னக்கண்டி (வயது76) புறாப் பொறுக்கி, ஆ. ராகுலன்

(6ஆம் பக்கம் பார்க்க)

## இடம் பெயர்ந்த மக்கள் ஆலயங்களில் தஞ்சம்

(யாழ்ப்பாணம்)

நேற்றுக் காலை நடந்த இராணுவ தாக்குதலால் இடம் பெயர்ந்த பத்தமேனி மக்கள் புத்தூர் சோமஸ்கந்தா வித்தியாலயம், நீர்வேலி தேவாலயம், ஆவரங்கால் சிவன் கோவில் ஆகியவற்றில் தஞ்சமடைந்தனர். இவர்களுக்கான உடனடி நிவாரணத்தை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரும் மேற் கொண்டனர்.

இவர்களுக்கு காலையில் தேநீருக்கு தேவையான சீனியும் மா, அரிசி போன்ற உணவுப் பொருள்களும் வழங்கப் பட்டன. இவர்களின் மேலதிக தேவைகளை கவனிக்கதமிழர் புனர் வாழ்வுக் கழகத்தினரும் றெட்பானா போன்றவை நட

(6ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் - வன்னி தொடர்பு சேவை நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ் - வன்னி தொடர்புச் சேவை நேற்றுக்காலை 10.30 மணிக்கு யாழ்ப்பாணத்தில் மாவீரர் தயா அவர்களின் தாயார் திருமதி செல்லையா சிறிதரங்கம் (சிவன்பண்ணை வீதி) அவர்களால் மங்கள விளக்கேற்றி நாடா வெட்டி சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வின்போது அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் திரு. கரிகாலனும் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

இதேவேளை கிளிநொச்சியில் நேற்றுக் காலை 10. 30 மணியளவில் துணுக்காய் பிரதேசப் பொறுப்பாளர் திரு. மகிந்தன் மங்கள விளக்கேற்றி

(6ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர் மீது படையினர் துப்பாக்கிப் பிரயோகம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை - அரியாலை பூம்புகார் கடற்பகுதியில் மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர் மீது, பூநகரி-கல்முனை-பூவரசம்தீவு இராணுவ முகாமில் இருந்து நேற்றுக் காலை துப்பாக்கிப்பிரயோக தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது.

கடற்தொழிலில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது படையினர் தாக்குதலை நடத்தினர்.

இதனை அடுத்து மீனவர்கள் தொழிலைக் கைவிட்டு விட்டு கரைக்குத் திரும்பினர். சில மீனவர்கள் தமது வலைகளையும் கைவிட்ட நிலையில் கரைசேர்ந்தனர். (24)

## கிழக்கு மாகாணத்தில் படையினர் உசார்

கிழக்கு மாகாணத்தில்உள்ள சிறிலங்கா இராணுவ முகாம்களில் கடமையாற்றும் படையினர் முழு அளவில் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

மணலாறில் விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலைத் தொடர்ந்து கிழக்குமாகாணத்தில் மேலும் தாக்குதல்கள் தொடரலாம் என்று இராணுவம் கருதுகிறது. இதனாலேயே மேற்படி ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# வரி விளம்பரம்

## Personal Classes

Basic Eng ish, General Eng ish, Advanced English ஆரம்பமாகிவிட்டது. க. சபாநாயகம் பிள்ளையார் ஒழுங்கை, திருநெல்வேலி. (4651,

## ஸ்ரீ லங்கா அச்சகம்

மக்களின் நல் மதிப்பைப் பெற்ற ஸ்ரீ லங்கா அச்சகம் (புத்தகசாலையல்ல) தனது சொந்த இடத்திலேயே (ராஜா தியேட்டர் அருகாமை ஸ்ரீகாந்தா அச்சகலேன்) இயங்கிக் கொண்டிருக்கின்ற தென்பதை அன்பான மக்களுக்கு தெரியப்படுத்திக் கொள்கின்றோம். சிந்தியுங்கள்! செயல்படுங்கள்! (4563]

## சேவை

றெனி மூக்குக்கண்ணாடியகம் உங்கள் கண்களை பரிசோதித்து கண்ணாடி சரியாகவழங்கப்படும். இல. 288, நாவலர் வீதி, ஆனைப்பந்தி (யாழ் தனியார் வைத்தியசாலைக்கு முன்பாக) யாழ்ப்பாணம். (சி/6356)

## உங்களை அழைக்கின்றது

யோ. எகட்டனின் ஜெசித்தாரா உணவகம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரிமுன்ஒழுங்கை. மதிய உணவுப் பாசல்கள் பகல் 11/30மணி முதல் பெற்றுக் கொள்ளலாம். எங்களுக்குமுன் கூட்டியே அறிவித்தால் நேரடியாக அனுப்பி வைக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு: முகாமையாளர் ஜெசித்தாரா-சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, (சி 6357)

## தேவை

ஜாம் போத்தல்கள், பன்ரா, கொக்கோகோலா வகையிலான 300 மில்லி லீற்றர், 160 மில்லி லீற்றர் போத்தல்கள் என்பன எம்மால் நியாய விலையில் கொள்வனவு செய்யப்படும். சுரபி பழரசத் தொழிற்சாலை, கோப்பாய் தெற்கு கோப்பாய். (சி-6322)

நல்ல நிலையிலுள்ள 6' × 3' இரும்பு அலுமாரிகள் உடன் தேவை. நல்ல விலை கொடுக்கப்படும். தொடர்பு: சங்கிலியன் விறகுகாலை 639 பருத்தித்துறைவீதி, முத்திரைச்சந்தி நல்லூர். (4668)

## மிருதங்கம்

மிருதங்க பரீட்சை எடுக்கும் மாணவர்களின் மிருதங்க திருத்த வேலைகள் மிகவிரைவில் நல்ல முறையில் மலிவாகச் செய்து கொடுக்கப்படும். கோவிந்த பிள்ளை விஜயகுமார், பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (4660)

## காணவில்லை

எனது மகளின் பூப்புனித நீராட்டுவிழாப் படங்கள் [நெகட்டிவ் உட்பட] மாசி மாதம் கிளாலியில் தவறவிடப்பட்டது. அதனைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்திலோ அல்லது ம சிவசுப்பிரமணியம், சங்குவேலி தெற்கு, மானிப்பாயிலோ சமர்ப்பிக்கவும். (4654)

## ஜெசித்தாரா உணவகம்

நீங்கள் சுவையான உணவை எங்கும் உண்ணலாம். நாங்கள் உங்கள் உணவு வகைகளுக்கு மேலும் சுவையூட்டுகின்றோம். வந்து பரீட்சித்துப் பாருங்கள். ஜெசித்தாரா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி. (சி/ 6358)

## உடன் விற்பனைக்கு

பிறவுண் பேட்டு குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (4665)

## 1993-94 ஸ்ரீமுக புதுவருஷ பலன்கள்

புதுவருஷப்பிறப்பு கர்மம் ஆரம்ப முகூர்த்த வேளை, கைவிசேஷம், கைரேகை சாஸ்திரம், செவ்வாய் மாற்றம் அடங்கியவை ரூ. 8.50 எங்கும் விற்பனையாகின்றது. கனகா ரேடர்ஸ், திருநெல்வேலிச் சந்தி. நூலாசிரியர் சத்தியதஸன்). (4663)

## குருபூசை

யாழ்ப்பாணம் ஒட்டுமடம் கலைவாணி சனசமூக நிலையத்தினர் பொன்னைப்பா சுவாமிகளின் குருபூசைத்தினத்தை கடந்த திங்கட்கிழமை வெகு சிறப்பாகக் கொண்டாடினர்.

கோப்பாய்பிரிவு செஞ்சிலுவையாளரின்

## கண்ணீர் அஞ்சலி



### திரு. க. புவனேந்திரன்

(இ. செ. ச. உப தலைவர் யாழ். கிளை)

சேவையின் தேவை கண்டு
செயல் வடிவாய் நின்றவரே
செஞ்சிலுவை விருட்சத்தின்
வேரெனவே திகழ்ந்தவரே
உங்கள் மரணம் முடிவல்ல
எழுகின்ற விழுதுகளாய்
சென்று விட்ட திசை நோக்கி
தொழுது நிற்கின்றோம்

முக்கிய அறிவித்தல்:-
கோப்பாய் பிரிவு செஞ்சிலுவை

நிர்வாகசபை உறுப்பினர்கள் / தொண்டர்கள்
அலகுகளின் நிர்வாகசபை உறுப்பினர்கள்/ தொண்டர்கள்

பிரிவு அலகுகளின் நி / சபை/உறுப்பினர்கள், தொண்டர்கள் அனைவரையும் இன்று காலை 8.00 மணிக்கு யா - கிளை அலுவலகத்தில் அஞ்சலி செலுத்துவதற்கு சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கிறோம். (4670)

## அஞ்சலி

### திரு. K. புவனேந்திரன்

(உப தலைவர், இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ். கிளை)

பாதிக்கப்பட்ட மக்களுக்கான பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளையில் நலிவடைந்த மக்களின் நிழல் என சர்வதேசத்தின் அங்கீகாரத்தைப் பெற்ற செஞ்சிலுவைக் கொடியை உதாசினஞ் செய்து வீசப்பட்ட குண்டுக்குப் பலியான இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ். கிளையின் உப தலைவர் திரு. K. புவனேந்திரனின் மறைவுக்கு எமது அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

இவரது இழப்பினால் துயருற்றிருக்கும் இவரது குடும்பத்தினருக்கும், இவர் சார்ந்த அமைப்பிற்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

(சி-6400)

## நிதி சேகரிப்பிற்குமுன் அனுமதிவேண்டும்

யாழ் மாவட்டத்தில் உள்ள அரசினர் நன்கொடை பெறும் சகல சனசமூக நிலையங்களும் நிதிசேகரிப்பதானால் ரிக்கற் அடிப்பதற்கு முன் யாழ். பிரதேச உள்ளூராட்சித் திணைக்களத்தில் முதலில் அநுமதி பெற வேண்டும்.

நிதி சேகரிப்பால் கிடைக்கும்வரவு -செலவு விபரங்களை அந்த அந்தப் பகுதி உள்ளூராட்சி மன்றங்கள் சரிபார்த்து யாழ். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திணைக்களத்திற்கு பூரணமான அறிக்கைகளை சமர்ப்பிக்கவேண்டுமென்றும் கணக்கு அறிக்கைகளைசமர்ப்பிக்கத்தவறும் சனசமூகநிலையங்கள்மீது தகுந்த நடவடிக்கைளடுக்கப்படும் என்றும்யாழ். பிரதேசஉள்ளூராட்சி உதவி ஆணையாளர்திரு சுந்தரம் டிவகலாலா தெரிவித்துள்ளார். [24]

## 10 ஆம் ஆண்டு நிறைவு

தீவகப் பிரதேச சென்யோன் அம்புலன்ஸ் முதலுதவிப் படைப் பிரிவின் 10-வது ஆண்டு நிறைவு விழா இன்று பி. ப. 2 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கின்றது.

தீவக சென் யோன் அம்புலன்ஸ் முதலுதவிப் படையின் ஆணையாளர் திரு. காங்கேசு நாகேந்திரன் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் சென்யோன் அம்புலன்ஸ் முதலுதவி படையின் யாழ் மாவட்ட ஆணையாளர் திரு நா. போஜன் பிரதம விருந்தினராகவும், தீவக அரசியல் நிர்வாக பொறுப்பாளர் திரு. செம்மணன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கின்றார்கள். இவ்விழாவில் யாழ். கல்வித் திணைக்களகத்தைச் சேர்ந்த திரு. சி. புலேந்திரன் தீவகத்தில் கடமையாற்றிய போது செய்த சேவையினைப் பாராட்டி விருது வழங்கும் வைபவமும் இடம்பெற விருக்கின்றது. (14)

## வெளியூர் தபால்கள்

இம் மாதம் 16 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு கப்பலுக்கு கடிதங்கள் எடுத்துச் செல்லப்படும் என யாழ். பிரதம தபாலதிபர் அறிவித்துள்ளார்.

## மாட்டுவண்டிச் சவாரி ஒத்திவைப்பு

ஆவரங்கால் வீனஸ் விளையாட்டுக் கழகத்தால் இன்று பிற்பகல் 2 00 மணிக்கு நடாத்தப்படவிருந்த
மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி
13-04-93 செவ்வாய்க்கிழமை
பிற்பகல் 2-00 மணிக்கு இடம்பெறும்.

வீனஸ் வி. கழகம்

(4671)

## நினைவு கூருகின்றோம்...

## 1993-04-11

1984 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ். மாவட்டத்தில் பரவலாக சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 4 தமிழர்கள்.

1987 ஆம் ஆண்டு கிளி - குறிஞ்சாதீவில் காவற்கடமையில் ஈடுபட்டிருந்தபோது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

ரஞ்சித் [வன்னியசிங்கம் பாஸ்கரன் - இத்தாவில் - பளை]

கர்ணன் [புண்ணியர் சிவராசா - சின்னத்தாளையடி. தருமக்கேணி - பளை]

1988 ஆம் ஆண்டு ஒட்டங்குளத்தில் இந்தியப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

சுனில் [ — கதிரவன் - தமிழகம்]

பாண்டியன்குளத்தில் இந்தியப் படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

லெப். ரவி [குலசேகரம் செல்வநாயகம் - முள்ளிவாய்க்கால் மேற்கு]

1989 ஆம் ஆண்டு மட்டுநகரில் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட காட்டுமூறிவைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்,

1992 ஆம் ஆண்டு மட்டு ஊறணிப் பகுதியில் வீதியில் சென்று கொண்டிருந்த தமிழர்கள் மீது சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட கண்மூடித் தனமான துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-6373)

UNIVERSITY OF JAFFNA
EXTERNAL DEGREE PROGRAMME - 1991/1992

ஜாம் போத்தல்கள், பன்ரா, கொக்கோகோலா வகையிலான 300 மில்லி லீற்றர், 160 மில்லி லீற்றர் போத்தல்கள் என்பன எம்மால் நியாய விலையில் கொள்வனவு செய்யப்படும். சுரபி பழரசத் தொழிற்சாலை, கோப்பாய் தெற்கு கோப்பாய். (சி-6322)

நல்ல நிலையிலுள்ள 6' × 3' இரும்பு அலுமாரிகள் உடன் தேவை. நல்ல விலை கொடுக்கபடும். தொடர்பு: சங்கிலியன் விறகுகாலை 639 பருத்தித்துறைவீதி, முத்திரைச்சந்தி நல்லூர். (4668)

கைவிசேஷம், கைரேகை சாஸ்திரம், செவ்வாய் மாற்றம் அடங்கியவை ரூ. 8.50 எங்கும் விற்பனையாகின்றது. கனகா ரேடர்ஸ், திருநெல்வேலிச் சந்தி. நூலாசிரியர் சத்தியதஸன்). (4663)

## குருபூசை

யாழ்ப்பாணம் ஓட்டுமடம் கலைவாணி சனசமூக நிலையத்தினர் பொன்னைப்பா சுவாமிகளின் குருபூசைத்தினத்தை கடந்த திங்கட்கிழமை வெகு சிறப்பாகக் கொண்டாடினர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளையில் நலிவடைந்த மக்களின் நிழல் என சர்வதேசத்தின் அங்கீகாரத்தைப் பெற்ற செஞ்சிலுவைக் கொடியை உதாசீனஞ் செய்து வீசப்பட்ட குண்டுக்குப் பலியான இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ். கிளையின் உப தலைவர் திரு. K. புவனேந்திரனின் மறைவுக்கு எமது அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

இவரது இழப்பினால் துயருற்றிருக்கும் இவரது குடும்பத்தினருக்கும், இவர் சார்ந்த அமைப்பிற்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

– தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

(சி-6400)

றார்கள். இவ்விழாவில் யாழ். கல்வித் திணைக்களகத்தைச் சேர்ந்த திரு. சி. புலேந்திரன் தீவகத்தில் கடமையாற்றிய போது செய்த சேவையினைப் பாராட்டி விருது வழங்கும் வைபவமும் இடம்பெற விருக்கின்றது. (14)

## வெளியூர் தபால்கள்

இம் மாதம் 16 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு கப்பலுக்கு கடிதங்கள் எடுத்துச் செல்லப்படும் என யாழ். பிரதம தபாலதிபர் அறிவித்துள்ளார்.

கொல்லப்பட்ட காட்டுமூறிவைச் சேர்ந்த தமிழ்ப்பொது மகன்,

1992 ஆம் ஆண்டு மட்டு ஊறணிப் பகுதியில் வீதியில் சென்று கொண்டிருந்த தமிழர்கள் மீது சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-6373)

**UNIVERSITY OF JAFFNA**

EXTERNAL DEGREE PROGRAMME - 1991/1992

# FIRST IN ARTS/FIRST IN COMMERCE, GENERAL ARTS PART I, AND COMMERCE PART I

## ORIENTATION COURSE - 1

# TIME - TABLE

**APRIL 1993**

| TIME | APRIL 19th | APRIL 20th | APRIL 21st | APRIL 22nd | APRIL 23rd | APRIL 26th | APRIL 27th | APRIL 28th | APRIL 29th | APRIL 30th |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 8 - 9 | Sanskrit 1. 1 | Christian Civilization 1. 1 | Accounts 1. 1 | History 1. 1 | Drama & Theatre Arts 1. 1 | Management Fine Arts FAG 2.1 | Commerce 1.1 Fine Arts FAG 2.2 | Hindu Civilization 1. 1 Linguistics LG2 | Maths Commerce 2.5B English Literature ENG2 2 | Drama and Theatre 2.1 DIG |
| 9 - 10 | Sanskrit 1. 2 | Christian Civilization 1. 2 | Accounts 1. 2 | History 1. 2 | Drama & Theatre Arts 1. 2 | Management Christian Civ CCG 2.1 | Commerce 1.2 Christian Civil CCG 2.2 | Hindu Civilization 1 2 Economics ECN2.1 | Maths Political Science PG 2.1 | Economics ECNG 2.2 |
| 10 - 11 | English Literature 1. 1 | Linguistics 1. 1 | Communication Studies | Tamil 1. 1 | Contemporary Affairs | Political Science Geography GYG 2.1 | philosophy 1,1 Linguistics IG 2.1 | Economics (Arts) 2.1 Commerce (Com) 2.2 2.3 | E. S. L. Hindu Civil HCG 2.1 | Drama & Theatre DTG 2.2 |
| 11 - 12 | English Literature 1. 2 | Linguistics 1. 2 | Communication Studies | Tamil 1. 2 | Contemporary Affairs | Political Science Tamil TG 2. 1 | Philosophy 1.1 Philosophy PHYG 2 1 | Economics (Arts) 1.2 Economics ECN 2 2 | E. S. L. Political Science PG 2.2 | |
| 1 - 2 | Population Studies | Social Psychology | Fine Arts 1. 1 | Geography 1. 1 | Sri Lankan Studies | Logic & Scientific Method Geography GYG 2.2 | Economics (Com) 11 English Literature ENG | Enviresmental Studies Commerce (Com) 2.4 Sanskrit SKTG2 2 | Hindu Civilization HGG 2,2 | E.S.L. |
| 2 - 3 | Population Studies | Social Psychology | Fine Arts 1. 2 | Geography 1. 2 | Sri Lankan Studies | Logic & Scientific Method Commerce COM 2.1 | Economics (Com) 1.2 Philosophy PHYG 2.2 | Environmental Studies History HG 2.1 | Economics ECNG 2.1 | E,S.L. |
| 3 - 4 | | | | | | Tamil TG 2.2 | Commerce COM 2.2 | Commerce COM2.5 A COM 2 1 | History HG 2,2 | E.S.L, |

சி/6380

நல்லூர் இனை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

### வளைகுடா யுத்தத்தால் பாதிப்புற்று

# நாடுதிரும்பியோருக்கு உதவ முற்பணம்வழங்க கோரிக்கை

(கொழும்பு)

மத்திய கிழக்கு யுத்தத்தின் போது தமது தொழில்வாய்ப்புக்களை இழந்து நாடு திரும்பிய இலங்கையர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நஷ்டஈடு வழங்கப்படும் வரை அவர்களுக்கு முற்பணம் கொடுக்கப்பட வேண்டுமெனத் தொழில், தொழிற்பயிற்சி அமைச்சு ஐக்கியநாடுகள்சபையின் நஷ்டஈட்டுப்பிரிவைக் கடித மூலம் வேண்டியிருப்பதாகத் தெரியவருகின்றது.

அமைச்சு அனுப்பி வைத்துள்ள மேற்படி கடிதத்திற்குப் பதில் கிடைத்ததும் அது குறித்து பொதுமக்களுக்கு அறிவிக்கப்படவிருப்பதாகத் தெரியவருகின்றது.

மேற்படி யுத்தத்தினால் இலங்கையைச் சேர்ந்த, குவைத், ஈராக் ஆகிய நாடுகளில் கடமையாற்றி தற்பொழுது தொழில் வாய்ப்பை இழந்தவர்கள் சுமார் 84 ஆயிரம் என தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நட்டஈட்டை மிகக் கூடிய விரைவில் பெற்றுக் கொடுக்க அமைச்சு நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் அமைச்சு அனுப்பி வைத்துள்ள இவ்வாறான வேண்டுகோளை மத்திய கிழக்கு யுத்தத்தினால் தொழில்வாய்ப்பை இழந்த எந்த ஒரு நாட்டவர் சார்பிலும் விடுக்கப்படவில்லை எனத் தெரியவகின்றது.

## எதிர்க்கட்சி பிரமுகர்கள் அதிகாரிகளுடன் ,பேச்சு

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினரும், சுதந்திரக் கட்சி தலைமையிலான பொது சனமுன்னணியினரும், தேர்தல் ஆணையாளர் பொலிஸ்மா அதிபர் மற்றும் மாகாணப்பிரதி பொலிஸ்மா அதிபர்களை சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளனர். இப்பேச்சுக்களின் போது சுதந்திரமானதாகவும் நீதியானதாகவும் தேர்தல் நடத்துவதுபற்றி ஆராயப் படவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை ஹரிஸ்பத்துவ தொகுதியில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் பிரதம அமைப்பாளரான டாக்டர் சரத் அமுனுகமவும் மற்றும் 27 தொண்டர்களும் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மத்திய மாகாண சபைக்கான தேர்தலில் போட்டியிடும் டாக்டர் சரத் அமுனுகம சட்டவிரோதமான முறையில் சுவரொட்டிகளை ஒட்டியதாகவும், அதற்காகவே அவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் பொலிசார்கூறியுள்ளனர்.

## ஆசிரியர் இடமாற்றத்திற்கு புதிய கொள்கை வகுப்பு

### கல்வி அமைச்சு செயலாளர்

(கொழும்பு)

வடகிழக்கில் அமைந்துள்ள சிறிலங்கா அரச பாடசாலைகளில்கடமையாற்றும் ஆசிரியர்களின் இடமாற்றம் சம்பந்தமாக மாகாணகல்வி அமைச்சு புதிய கொள்கைத்திட்டமொன்றை வகுத்திருப்பதாக வடகிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஜனாப் எம்.ஏ காதர் மொஹிதீன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தாபனக் கோவை மூன்றாம் அத்தியாயத்திற்கமைய சகல இடமாற்றங்களும் சபை ஒன்றினால் வழிநடத்தப்படும். இச்சபையானது ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பான ஒரு கொள்கைத் திட்டத்தை வகுத்து செயற்படுவதுடன் ஒருவரின் இடமாற்றம் தொடர்பாக ஏற்படும் அசௌகரியங்கள் தொடர்பாக மேன்முறையீடு செய்வதற்கும் வசதியளிக்கப்பட்டிருப்பது முக்கிய அம்சமாகும்.

இத்திட்டத்தினால் ஒரே பாடசாலையில் பல வருடங்களாகக் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு வேறு பாடசாலைகளுக்குச் செல்வதற்கும் நீண்டகாலம் ஒரே பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்குப் பதிலாக புதிய ஆசிரியர்களைக் கொண்டு வெற்றிடங்களை நிரப்புவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டம் நடைமுறைக்கு மிகவிரைவாக அமுல்படுத்தப் படவிருப்பதாகவும் இதுவரை காலமும் ஏற்பட்டு வந்த குறைபாடுகள் தவிர்க்கப்படவிருப்பதாகவும் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார். (பா

### அன்பளிப்பு

யா/சாவகச்சேரி மகளிர்மகா வித்தியாலயத்தில் கல்விகற்கும் மாணவிகளின் குடிநீர் கஷ்டத்தைப்போக்க சாவகச்சேரியைச் சேர்ந்த திரு. சபாரத்தினம் நடராசா அவர்கள் இப் பாடசாலைக்கு 18,000/- பெறுமதியான றொபின் நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். இவ் இயந்திரத்தை [சென்ற] புதன் கிழமை காலை சம்பிரதாயபூர்வமாக திரு. திருமதி நடராசா அவர்களால் இயக்கி வைக்கப்பட்டது. (86)

### அடையாள உண்ணா விரதம்

அன்னை பூபதி நினைவு நாளைமுன்னிட்டுஞாபகார்த்த அடையாள உண்ணா நோன்பு வலிமேற்கு சனசமூக நிலையங்களின் சமாஜத்தினால் நடாத்தப்படவுள்ளது.

மேற்படி உண்ணா நோன்பு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00மணி தொடக்கம் மாலை 3.00மணிவரை தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு சுழிபுரம் பிரதேச சபையைச் சார்ந்த சகல சனசமூக நிலையங்களையும் கலந்து கொள்ளுமாறு சுழிபுரம் உப. சமாஜத்தின் செயலாளர் த. விமலரூபன் தெரிவித்துள்ளார். (41)

### நாவாந்துறையில் நெருப்புக்காய்ச்சல்

நாவாந்துறையில் நெருப்புக் காய்ச்சல் நோய் காரணமாக சுமார் பன்னிரண்டு பேர் சிகிச்சை பெற்றுள்ளார்கள் என யாழ். மாநகர சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர். இதனைத் தொடர்ந்து நாவாந்துறைப் பகுதியில் திடீர் சுகாதார நடவடிக்கைகளை இவர்கள் முடுக்கி விட்டுள்ளார்கள். இங்குள்ள கிணறுகளில் குளோரின் போடும் வேலைகளும், தெருக்களைச் சுத்தப்படுத்தும் வேலைகளும், குழந்தைகளுக்குத் தடுப்பூசி போடும் நடவடிக்கைகளும் இவர்களினால் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

### மருதடி விநாயகர் இரதோற்சவம்

மருதடி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா எதிர்வரும் புதன்கிழமை பகல் 12 மணியளவில் நடைபெறவுள்ளது. மறுநாள் தீர்த்த உற்சவமும் கொடியிறக்கமும், திருவூஞ்சல் மற்றும் சண்டேஸ்வரர் உற்சவமும் வழமைபோல இடம்பெறும். மார்ச் 29ஆம் திகதியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய மருதடி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் தொடர்து சிறப்பாக நடைபெற்று வருவது தெரிந்ததே.

# அச்சத்தையும், பீதியையும் போக்கியவர்கள் நாங்களே

## லலித் கூறுகிறார்

[கொழும்பு]

மக்களுக்கு இருந்த அச்சத்தையும், பயப்பீதியையும் போக்கியதற்கான பாராட்டு நிச்சயம் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்குமாத்திரமே உரியதாகும் என்று லலித் அத்துலத்முதலி தெரிவித்தார்.

குளியாப்பிட்டியாவில் மாகாண சபை தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில்;

மற்றைய எதிர்க்கட்சிகளின் ஆதரவுடன் எத்தகையதான தேர்தல் மோசடிகளையும் இம்முறை கடுமையாக எதிர்த்தே தீரும் என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன் அரசின் இலவச மதிய உணவுத்திட்டம் உருப்படியான ஒன்றல்ல. இது ஒரு வெறும் போலி. பாடசாலைப் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் மூன்று ரூபாவில் மூன்று றொபிகளை மட்டுமே அவர்கள் வாங்கிக் கொள்ள முடியும்.

உணவுப் பொருள்களின் விலையேற்றத்திற்கு விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட மானிய உதவிகள் நிறுத்தப்பட்டமையே காரணமாகும். விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட மானியங்கள் மறுக்கப்பட்டதும் உற்பத்தி வீழ்ச்சி அடைந்தது. விவசாயிகளுக்குதொழில் நுட்ப உதவிகளோ, ஆலோசனைகளோ வழங்கப்படுவதில்லை. இதனாலேயே தேங்காய் விலையேற்றம் ஏற்பட்டது.

பாரிய அளவிலான வீண் விரயம் இன்று அரசாங்கத்தாலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நாட்டின் அளப்பரிய வளம் வீணாக விரயமாவதால் தட்டுப்பாடும் வறுமையும் ஏற்படுகின்றது. இந்த வீண் விரயம் தடுக்கப்படுமாயின் வேலை இல்லாத் திண்டாட்டம் பெருமளவில் வீழ்ச்சி அடையும் என தெரிவித்தார்.

## மாகாண சபைத் தேர்தலில் பௌத்தபிக்குகளும் போட்டி

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல்களில் இரு பௌத்த பிக்குகளும், இரு நடிகர்களும் வேட்பாளர் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

பௌத்த பிக்குகள் இவ்வாறு தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிட முன் வந்தமை இதுவே முதல் தடவையாகும் என்பதும், இதனால் மக்கள் மத்தியில் பெரிய ஆச்சரியத்தை உண்டுபண்ணியிருப்பதாகவும் கூறப்படுன்கிறது.

### வவுனியாவில் தபால் ஊழியர்கள்

## வேறுபொருள்கள் எருத்துவர இராணுவம் தடைவிதிப்பு

(வவுனியா)

வவுனியா நகரிலிருந்து தபால் பொதிகளுடன் வடபகுதி நோக்கி வரும் தபால் சேவகர்கள் வேறு பொருள்கள் எடுத்துவருவதை இராணுவம் தடை செய்துள்ளது.

இந்தத் தபாலக ஊழியர்கள் தமது வீட்டுக்குரிய பொருள்களை எடுத்துவருவதற்கும் இராணுவம் தடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே சமயம் வடபகுதி நோக்கி எடுத்து வரப்படும் தபால் பொதிகள் யாவும் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. (தி)

### கலந்துரையாடல்

[கொழும்புத்துறை]

யாழ் மாவட்டத்தில் பிரமாண்டமான புத்தகக் கண்காட்சி ஒன்று இவ் வருடம் நடாத்த உத்தேசிக்கப்பட்டு யாழ். மாவட்ட எழுத்தாளர் சங்கத்தின் அனுசரணையுடன் இடம் பெறவுள்ளது

இக்கண்காட்சியை மிகப்பிர

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்ப்பாணக் கிளைத் தலைமையலுவலகம்



பிறிதின்னுயிர் காத்துத் தன்னுயிர் நீத்த மாபெரும் தொண்டர் உயர்திரு.

**க. புவனேந்திரன்**

(உபதலைவர்)

10-04-1993 சனிக்கிழமை ஆவரங்காலில் ஏற்பட்ட அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முதலுதவியளிக்க விரைந்த செஞ்சிலுவைத் தொண்டர் குழாமுக்கு தலைமை தாங்கிச் சென்ற எமது உபதலைவர் உயர்திரு. க. புவனேந்திரன் அவர்கள் சடுதியாக ஏற்பட்ட அனர்த்தம் காரணமாகக் காயமடைந்து தன்னுயிர் நீத்தார் என்பதை அனைவருக்கும் ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகின்றோம்.

இவரின் புகழுடல் 11-4-93 ஞாயிறு [இன்று] காலை 8.00 மணி தொடக்கம் 9.00 மணி வரை 73, கண்டி வீதி, யாழ்ப்பாணம், இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளைத்தலைமையலுவலகத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

அஞ்சலியில் அனைத்து அலகு, பிரிவு அங்கத்தவர் அனைவரையும் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தொண்டர்கள் அனைவரும் 11-4-1993 [இன்று] ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு யாழ். கிளைத் தலைமையலுவலகத்தில் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க,
யாழ். கிளையினர்.

73, கண்டி வீதி.

**உணவு பரிமாறும் சேவை**

எவ்வகையான வைபவங்களானாலும் உங்கள் மேலைத்தேய, கீழைத்தேய உணவு வகைகள், சிற்றுண்டிகளுக்கு வைபவம் நடைபெறும் இடத்தில் பரிமாறும் சேவையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு:

முகாமையாளர்

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் ...

அவர் மேலும் தெரிவிக்கையில் தாபனக் கோவை மூன்றாம் அத்தியாயத்திற்கமைய சகல இடமாற்றங்களும் சபை ஒன்றினால் வழி நடத்தப்படும். இச்சபையானது ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பான ஒரு கொள்கைத் திட்டத்தை வகுத்து செயற்படுவதுடன் ஒருவரின் இடமாற்றம் தொடர்பாக ஏற்படும் அசௌகரியங்கள் தொடர்பாக மேன்முறையீடு செய்வதற்கும் வசதியளிக்கப்பட்டிருப்பது முக்கிய அம்சமாகும்.

இத்திட்டத்தினால் ஒரே பாடசாலையில் பல வருடங்களாகக் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு வேறு பாடசாலை குறைபாடுகள் தவிர்க்கப்படவிருப்பதாகவும் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார். (பா

## அன்பளிப்பு

யா/சாவகச்சேரி மகளிர்மகா வித்தியாலயத்தில் கல்விகற்கும் மாணவிகளின் குடிநீர் கஷ்டத்தைப்போக்க சாவகச்சேரியைச் சேர்ந்த திரு. சபாரத்தினம் நடராசா அவர்கள் இப் பாடசாலைக்கு 18,000/- பெறுமதியான றொபின் நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். இவ் இயந்திரத்தை [சென்ற] புதன் கிழமை காலை சம்பிரதாயபூர்வமாக திரு. திருமதி நடராசா அவர்களால் இயக்கி வைக்கப்பட்டது. (86)

காலை 9.00மணி தொடக்கம் மாலை 3.00மணிவரை தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு சுழிபுரம் பிரதேச சபையைச் சார்ந்த சகல சனசமூக நிலையங்களையும் கலந்துகொள்ளுமாறு சுழிபுரம் உப. சமாஜத்தின் செயலாளர் த. விமலரூபன் தெரிவித்துள்ளார். (41)

# வேறுபொருள்கள் எடுத்துவர இராணுவம் தடைவிதிப்பு

(வவுனியா)

வவுனியா நகரிலிருந்து தபால் பொதிகளுடன் வட பகுதி நோக்கி வரும் தபால் சேவகர்கள் வேறு பொருள்கள் எடுத்துவருவதை இராணுவம் தடைசெய்துள்ளது.

இந்தத் தபாலக ஊழியர்கள் தமது வீட்டுக்குரிய பொருள்களை எடுத்துவருவதற்கும் இராணுவம் தடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே சமயம் வடபகுதி நோக்கி எடுத்து வரப்படும் தபால் பொதிகள் யாவும் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. (தி)

## கலந்துரையாடல்

[கொழும்புத்துறை]

யாழ் மாவட்டத்தில் பிரமாண்டமான புத்தகக் கண்காட்சி ஒன்று இவ் வருடம் நடாத்த உத்தேசிக்கப்பட்டு யாழ். மாவட்ட எழுத்தாளர் சங்கத்தின் அனுசரணையுடன் இடம் பெறவுள்ளது.

இக்கண்காட்சியை மிகப்பிரமாண்டமானமுறையில் நடாத்துவது சம்பந்தமான ஓர் ஆலோசனைக்கூட்டம் இன்று 11 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை பத்து மணிக்கு யாழ் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பணிமனையில் யாழ் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா தலைமையில் நடைபெறும்.

இவ் ஆலோசனைக்கூட்டத்திற்கு சகல எழுத்தாளர்களையும் தவறாது சமூகம் தரும்படி அவர் வேண்டுகோள்விடுத்துள்ளார் [24]

## பயணிகள் வருகை அதிகரிப்பு

(வவுனியா)

தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு வவுனியா தாண்டிக்குளம் இராணுவ சோதனை முகாம் ஊடாக வடக்கு நோக்கி பலநூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் வந்தவண்ணம் உள்ளனர்.

## எருது பயன்பாடு

வன்னிப்பகுதியில்எரிபொருள் தட்டுப்பாட்டினால் டிராக்டரினால் சூடு மிதிக்கப்படுவது குறைந்து வருகிறது. பலஇடங்களில் எருதுமாடுகளினால் சூடு மிதிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

இந்த அறுவடைக் காலத்தில் டிராக்டருக்கு விடப்படும் எரிபொருள்கள் தடையினாலும், மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டினாலும்விவசாயிகள் நெற்கதிரை அடுக்கி எருதுகளின் உதவியுடன் சூடு மிதிக்கின்றனர்.

சாக்கிற்கு ஏற்பட்ட தடையினால் படங்கிற்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எருதுகளினால் சூடு மிதிப்பதனால் படங்கின் தேவை இல்லாமல்போகிறது என்று தெரிவிக்கப்பட்டது. [தி]

பட்ட அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முதலுதவியளிக்க விரைந்த செஞ்சிலுவைத் தொண்டர் குழாமுக்கு தலைமை தாங்கிச் சென்ற எமது உபதலைவர் உயர்திரு. க. புவனேந்திரன் அவர்கள் சடுதியாக ஏற்பட்ட அனர்த்தம் காரணமாகக் காயமடைந்து தன்னுயிர் நீத்தார் என்பதை அனைவருக்கும் ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகின்றோம்.

இவரின் புகழுடல் 11-4-93 ஞாயிறு [இன்று] காலை 8.00 மணி தொடக்கம் 9.00 மணி வரை 73, கண்டி வீதி, யாழ்ப்பாணம், இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளைத்தலைமையலுவலகத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

அஞ்சலியில் அனைத்து அலகு, பிரிவு அங்கத்தவர் அனைவரையும் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தித்தின் தொண்டர்கள் அனைவரும் 11-4-1993 [இன்று] ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு யாழ். கிளைத் தலைமையலுவலகத்தில் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க,
யாழ். கிளையினர்.

73, கண்டி வீதி.
யாழ்ப்பாணம்.
10 - 04 - 1993

( சி/ 6398 )


அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது

## புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

குறைந்த விலை! நிறைந்த தரம்!

ஆடவருக்கான ❋ சேட்டிங் ❋ சூட்டிங்
இளநங்கையருக்கான ❋ புதிய ரக சாறிகள்
❋ ஸ்கேட் ❋ பிளவ்ஸ்
சிறுவர்களுக்கான ❋ உள்நாட்டு
❋ வெளிநாட்டு ஆடைகள்

மற்றும் உங்கள் அனைத்து தேவைகளிற்கும்
நீங்கள் நாடவேண்ய ஒரே இடம்

## எழிலி புடைவை வாணிபம்

மின்சார நிலைய வீதி, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

[4642]



## ஜெசித்தாரா உணவகம்

ஜோ· எகட்டனின்

ஜெசித்தாராவின் தரமிகு சுவையான
உணவுப் பார்சல்கள் பகல் 11.30 மணிமுதல்
பிற்பகல் 3.30மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

விலை விபரம் :

| | | |
|---|---|---|
| மரக்கறி | - | 24.50 |
| மீன் | - | 28.50 |
| இறைச்சி | - | 29.50 |

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை,
சுண்டுக்குளி.

எமக்கு வேறு கிளைகள் இல்லை.

(சி-6367)



## உணவு பரிமாறும் சேவை

எவ்வகையான வைபவங்களானாலும் உங்கள் மேலைத்தேய, கீழைத்தேய உணவு வகைகள், சிற்றுண்டிகளுக்கு வைபவம் நடைபெறும் இடத்தில் பரிமாறும் சேவையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு:

முகாமையாளர்
ஜெசித்தாரா
சுண்டுக்குளி மகளிர்
கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.

(சி-6366)


இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்ப்பாணக் கிளைத் தலைமையலுவலகம்

## அமரர்
## திரு. க. புவனேந்திரன்

உப தலைவர்

அவர்களின் மறைவையொட்டி சங்க ஊழியர்களின்

## கண்ணீர் அஞ்சலி

செஞ்சிலுவைச் சங்கமதில் அன்று
சேவை செய்திட வெண்ணியே
நெஞ்சினை நிமிர்த்திக் கொண்டே
நீண்ட தோர் தொண்டென
அஞ்சிடும் மக்களின் துயரினை
அகற்றிடும் வேளையின் போது
துஞ்சியதோ உந்தன் உடல்
துடிக்கிறதே ஊழியர் நெஞ்சம்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
10-04-1993

ஊழியர்கள்
இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்.

(சி/6396)


## ஸ்ரீதர் திரையரங்கில்

## 100 RIFLES

## (100 துப்பாக்கிகள்)

தமிழ் விளக்கம்

தினசரி மாலை 4 மணி, 6 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10.30 மாலை 4 மணி, 6 மணி

(சி-6376)


## ஆசிரியர் தேவை

மன்னார், முல்லைத்தீவு, மாவட்டங்களில் க. பொ. த. (சாதாரண / உயர்தர) மாணவர்களுக்கு கல்வி கற்பிக்க கணித / விஞ்ஞான / ஆங்கில / வர்த்தக ஆசிரியர்கள் தேவை. விரும்புவோர் தமது தகுதி, அனுபவம் என்பவற்றை வெளிப்படுத்தி, தாம் பணியாற்ற விரும்பும் மாவட்டத்தையும் கற்பிக்க விரும்பும் பாடத்தையும் குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு 20-04-93க்குமுன் விண்ணப்பிக்கவும். தங்குமிட வசதி, போக்கு வரத்து இலவசமாக ஏற்பாடு செய்யப்படும். வேதனம் நேரில் கலந்து பேசி தீர்மானிக்கப்படும் விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

பொறுப்பாளர்
தமிழீழக் கல்விக் கழகம்,
பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

[சி-6401]

## புற்று நோயாளர் விடுதி

## வடமாகாண புற்றுநோய் தடுப்புச் சங்கம்

விரைவில் புற்றுநோயாளர் விடுதி திறக்கப்படவிருக்கிறது. புற்றுநோயினால் பீடிக்கப்பட்டு உதவி அற்ற நிலையில் இருக்கும் நோயாளர்களுக்கு முன் உரிமை வழங்கப்படும்.

விபரங்களுக்கு:

விடுதி முகாமையாளர்,
228, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்,

(சி-6388)

†
யே.ம.சூ துணை

# 36வது வருட நினைவு தினம்

## அமரர் திரு. சுவானி லாசறு


(தவசிகுளம், மிருசுவில்,)

பிறப்பு: 10-03-1906 இறப்பு: 11-04-1957

உமது ஆத்மா சாந்தி அடைவதாக!!

உமது பிரிவால் துயருறும்:
அ பாக்கியநாதர் குடும்பம்.
''கம்பாவத்தை'' அ. தேவசகாயம் ஐயாத்துரை.
புலோலி தெற்கு. அ பா. மரியமுத்து – நேசம்.
11-04-1993 ச. பிலுப்பையா குடும்பம்.
(சி-6385)

# 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## தாமு. சீனிவாசகம்

[செட்டியார் ஐயாத்துரை]

பிறப்பு 15-10-1923 இறப்பு 11-3-1993

அன்னாரின் அந்தியேட்டி கிரியைகளிலும் மதியபோசன உபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
மனைவி: செல்லம்மா,
பிள்ளைகள்: பேரின்பநாயகம் கனடா,
தர்மரட்ணம் கனடா
செல்வரட்ணம் சுவீஸ்
மகாராணி இலங்கை
செல்வராணி சுவீஸ்
நாகேஸ்வரி கனடா
மருமகன் வ. பாலசிங்கம்
(கிராமசேவை உத்தியோகத்தர் உடுப்பிட்டி)
'செல்வவாசா' கரணவாய் மத்தி [4659]

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



## கடல் அரிப்பினால் வெளிச்சவீடு சேதம்

(வடமராட்சி)

பருத்தித்துறை முனைக் கோரியடியில் உள்ள வெளிச்சவீடு கடல் அரிப்பினால் சேதமடைந்து ஆபத்தான ஒரு நிலையை எதிர்நோக்கி வருவதாக அப்பகுதி மக்கள் அறிவிக்கின்றனர்.

வருடாவருடம் கடலில் ஏற்படும் கொந்தளிப்பு கடல் அரிப்பு ஆகியவற்றினால் வெளிச்சவீடு சேதமடைந்து வருவதாகவும், கூடிய விரைவில் வெளிச்சவீடு திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் ஏற்படும் பாரிய ஆபத்தை தடுக்க முடியாமல் போய்விடுமெனவும் மேலும் அறியமுடிகிறது.

இதேவேளை வடமாராட்சி போரூட் நிறுவனம் இந்த வெளிச்சவீட்டை கடல் அரிப்பிலிருந்து பாதுகாத்து மீனவர்களுக்கு உதவும் வகையில் திருத்த வேலைகளை மேற்கொள்ள இட்டமிட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (யோ)

## தொடர்ந்து ராக்கிங்

[கண்டி]

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் நிர்வாகத்தின் கடும் எச்சரிக்கைக்கும் பிறகும் ராக்கிங் தொடர்ந்து நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரபலமான பள்ளிக் கூடங்களில் கல்வி பயின்று ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றவர்களே கடுமையாக ராக் பண்ணப்படுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன

## தெருவிளக்கு அமைப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரசபைப் பகுதியில் தெருவிளக்குகளை ஏற்றும் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ள தாகப்பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் திரு. க. சண்முகநாதன் தெரிவித்தார். முதற்கட்டமாக நகரின் ஆறு முக்கிய இடங்களில் இத்தெருவிளக்குகள் அமைக்கும் திட்டம் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்படும் என்றும், இப்பரீட்சார்த்தத் திட்டம் வெற்றியளிக்குமானால் பருத்தித்துறை நகரின் ஏனைய பல பகுதிகளுக்கும் இத் தெருவிளக்குகள் அமைக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது (25)

மலரும் புத்தாண்டில் சலுகைக் கட்டணம்!

**விக்ரேஸ்-நியூவிக்ரேஸ்-விக்ரர் அன் சன்ஸ் ஸ்தாபனங்களின்**

# ஒருங்கிணைந்த சேவை

வண்ணக்கலர்களில் வீடியோ படப்பிடிப்புகள், எலக்ரோனிக கொம்பக்ற் டிஸ்க் பிளேயர் மூலம் பழைய புதிய பாடல்களை ஸ்ரீறியோ முறையில் பதிவு செய்தல், T V. வீடியோ டெக், றேடியோ, ரேப் றெக்கோடர், எலக்ரோனிக் கமரா, எலக்ரோனிக் மணிக்கூடுகள். எமெஜன்சிலைற் பற்றரிகள் மற்றும் மின் உபகரணங்கள் யாவும் திருத்துதல். ரான்ஸ் போமர் கொயில்கள் றிவைண்டிங் செய்தல் போன்ற எல்லாவித எலக்ரோனிக் தொழில் நுட்ப வேலைகளும் உத்தரவாதத்துடன் செய்பவர்கள்.

1960ஆம் ஆண்டிலிருந்து மின்சாரம் எலக்ரோனிக் சம்பந்தப்பட்ட பல தொழில் நுட்பங்களை முதன் முதலில் யாழ்நகரில் அறிமுகப்படுத்தியவர்கள்.

- திருத்த முடியாது என்று நினைத்த நீர் இறைக்கும் இயந்திரங்களின் மக்னெற்ரோ கொயில்களைப் புதுப்பித்து பல வருட உத்தரவாதத்துடன் விவசாயிகளுக்கு வழங்கியவர்கள்.
- T.V வீடியோ, டெக் மூலம் அண்ணன் ஒரு கோயில், மீனவநண்பன் போன்ற முதல் வீடியோ படங்களை மக்களுக்கு காண்பித்தவர்கள்.
- முதன் முதல் யாழ்நகரில் ஸ்ரீறியோ முறையில் பாடல் ஒலிப்பதிவு முறையை அறிமுகப்படுத்தி பலரை அத்துறையில் பயிற்றுவித்தவர்கள்.
- 1989ஆம் ஆண்டிலிருந்தே கொம்பக்ற்டிக்ஸ் பிளேயர் மூலம் பாடல்களை ஒலிப்பதிவு செய்பவர்கள்.
- வீடியோ படப்பீடிப்புகளில் புதிய சாதனைகளைப் படைத்து யாழ்நகரில் வெள்ளி விழாக் கண்டவர்கள்.

இன்று, மீண்டும் புதியதோர் தொழில்நுட்ப முறையில் நீங்கள் திருத்த முடியாது என்று நினைக்கும் எமெஜன்சிலைற் பற்றறிகளைத் திருத்தி சார்ச் செய்து உத்தரவாதத்துடன் கொடுக்கிறார்கள். இன்றே உங்கள் எல்லாவித எலக்ரோனிக், மின்சார தேவைகளுக்கும் நாடவேண்டிய இடம்,

**"விக்ரேஸ்"**
இல. 23 மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

**"நியூவிக்ரேஸ்"**
எலக்ரோனிக் கொம்பிளெக்ஸ்
இல 5 B. M. C. ஒழுங்கை
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

**"விக்ரர் அன் சன்ஸ்"**
இல. 100 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (4661)

## மெய்வல்லுநர் போட்டிகளில் பல்கலை மாணவர் சாதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வருடாந்த பீடங்களுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டிகளில் குறிப்பிடத்தக்க சில சாதனைகள் இம்முறை நிலைநாட்டப்பட்டுள்ளது.

ஆண்களுக்கான தடை தாண்டும் ஓட்டத்தில், 110 மீட்டர் தூரத்தை 18.59 செக்கனில் ஓடி முடித்து ஏ. என். ஆம்ஸ்ரோங்கும் ஆண்களுக்கான ஓட்டப்போட்டியில் 100 மீட்டர் தூரத்தை 10 97 செக்கனில் ஓடி முடித்து ஆர். சோதிலிங்கமும், ஆண்களுக்கான 400 மீட்டர் தூரத்தை 55.93 செக்கன்களில் ஓடி முடித்து பி.பி.ஆர் சென்சால் தொதேசுவும், ஆண்களுக்கான நீளம் பாய்தல் போட்டியில் 6.01 மீற்றர் தூரத்தை பாய்ந்து கடந்து எஸ்.ஈ கென்றிரன் நிலானும்,

ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டதில் இத்தூரத்தை 23 22 செக்கனில் கடந்து ஆர். சோதிலிங்கமும் 24.44 செக்கனில் கடந்து கே. மகேந்திரனும்,

பெண்களுக்கான 400 மீட்டர் ஓட்டத்தில் 1 நிமிடம் 14.12 செக்கனில்ஓடி முடித்து செல்வி சிவநேசராணியும், 1 நிமிடம்14.18செக்கனில்ஓடி செல்வி த. துளசியும் 1 நிமிடம் 13.56 செக்கனில் ஓடி செல்வி எஸ் தேவாவும்,

பெண்களுக்கான 100 மீட்டர் தடை தாண்டி ஓடும் போட்டியில் 19.63 செக்கனில் ஓடி முடித்து செல்வி ரி.சுபாஷினியும் சாதனைகளை புரிந்து உள்ளனர்.

4x100 மீற்றர் ஆண்களுக்கான அஞ்சல் ஓட்டத்தில் 48.15செக்கனில் ஓடி முடித்த விஞ்ஞான பீடத்தினரும், 49 06 செக்கனில் ஓடிமுடித்த கலைப்பீடத்தினரும்சாதனைபுரிந்துள்ளனர்.

பெண்களுக்கான 4x100மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் கலைப்பீடம் 1 நி 0.51 செக்கனில் ஓடி சாதனை ஏற்படுத்தியது. ஆண்களுக்கான 4x400 மீட்டர் அஞ்சல் ஓட்டத்தில் கலைப்பீடத்தினர் 3நி, 54:71 செக்கனில் ஓடி சாதனை நிலைநாட்டினர்.

## புளியிலிருந்து வீழ்ந்து மரணம்

(நெல்லியடி)

புளிய மரத்தில் புளியம்பழம் பிடுங்க ஏறிய குடும்பஸ்தர் ஒருவர் மரத்திலிருந்து தவறி வீழ்ந்து பரிதாபமாக மரணமானார்.

இச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. அல்வாய் வடக்கைச் சேர்ந்த த. கனகசூரியம் (வயது 54) என்பவரே இவ்விதம் மரணமானவராவார். (30)

## கருத்தரங்குகள்

(நெல்லியடி)

வடமராட்சிக் கோட்டத்தில், கரவெட்டி வலய, கணித ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு இம்மாதம் 19ஆம். திகதி காலை 8-30 மணிககு அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்திலும்,

பருத்தித்துறை வலய கணித ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு 21ஆம் திகதி காலை 8-30 மணிக்கு பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்திலும்,

வடமராட்சி வலய கணித ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு 23ஆம் திகதி காலை 8-30 மணிக்கு பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்திலும்.

வடமராட்சி கிழக்கு வலய

## சாவகச்சேரி கூ. சங்கத்திற்கு சைக்கிள்ரயர், ரியூப்

(தென்மராட்சி)

சாவகச்சேரி பலநோக்குகூட்டுறவு சங்கத்திற்கு அண்மையில் கொழும்பில் இருந்து பதினையாயிரம் (15,000) சைக்கிள் ரயர், ரியூப் வந்து சேர்ந்துள்ளன. இதில் முதலாக சங்கஅங்கத்தவர்களுக்கும் பின்புசங்கஊழியர்களுக்கும் குறித்தவிலைக்கு விற்பனைசெய்யப்படப்போவதாக சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன (86)

## இம்மாதம் முதல் சம்பள அதிகரிப்பு

பொது நிர்வாகச் சுற்றறிக்கை37/92ன்படி01-01-93இல் இருந்து அதிபர் தரத்திலுள்ளவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய புதிய சம்பளத் தொகையை இம்மாதச் சம்பளத்துடன் யாழ். பிரதேசத்தில் கடமையாற்றும் சகல அதிபர்களுக்கும் வழங்குமாறு யாழ். பிரதேச கல்விப்பணிமனைசகல கோட்டங்களுக்கும் அறிவித்துள்ளது.

இவ் அதிகரிப்பின்படி அதிபர் தரம் 1இல் உள்ளவர்கள் ரூபா 1010/- உம் அதிபர் தரம் 2இல் உள்ளவர்கள் ரூபா 960/- உம். அதிபர் தரம் 3இல் உள்ளவர்கள் ரூபா 850-/வும் பெறக்கூடிய வகையில் இச் சம்பளம் உயர்த்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [17]

## சேவைக்காலப் பயிற்சி வகுப்பு

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பிரிவில் உள்ள பாடசாலைகளில் கணித பாடத்தைக் கற்பிக்கும் கணித ஆசிரியர்களுக்கான கணித பாட

[செட்டியார் ஐயாத்துரை]

பிறப்பு 15-10-1923


இறப்பு 11-3-1993

அன்னாரின் அந்தியேட்டி கிரியைகளிலும் மதியபோசன உபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:

மனைவி: செல்லம்மா,
பிள்ளைகள்: பேரின்பநாயகம் கனடா,
தர்மரட்ணம் கனடா
செல்வரட்ணம் சுவீஸ்
மகாராணி இலங்கை
செல்வராணி சுவீஸ்
நாகேஸ்வரி கனடா
மருமகன் வ. பாலசிங்கம்
(கிராமசேவை உத்தியோகத்தர் உடுப்பிட்டி)
'செல்வவாசா' கரணவாய் மத்தி [4659]

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



## லெப். பொஸ்கோ

(கணபதி சிறீரஞ்சன்)

துன்னாலை, கரவெட்டி

வீரப்பிறப்பு: 15-04-69

வீரச்சாவு: 01-04-91

திதி: 11. 04. 93

இன்னலுறும் இனத்தின் இடர்தனைத் துடைத்திட
துன்னையம் பதியிருந்து வரிப்புலியாய் சீறி எழுந்த
சிறீரஞ்சனே!

வகைவகையாய் களங்கள் பலவாடி கடைசியில்
காரைநகரில் கயவர்களைப் பொடியாக்கிடவே
பொங்கியெழுந்திட்ட பொஸ்கோவே!!

துன்னாலை தெற்கு
கரவெட்டி. (4656)

குடும்பத்தினர்,
நண்பர்கள்


∴ முதன் முதல் யாழ்நகரில் ஸ்ரீறியோ முறையில் பாடல் ஒலிப்பதிவு முறையை அறிமுகப்படுத்தி பலரை அத்துறையில் பயிற்றுவித்தவர்கள்.

∴ 1989ஆம் ஆண்டிலிருந்தே கொம்பக்றடிக்ஸ் பிளேயர் மூலம் பாடல்களை ஒலிப்பதிவு செய்பவர்கள்.

∴ வீடியோ படப்பிடிப்புகளில் புதிய சாதனைகளைப் படைத்து யாழ்நகரில் வெள்ளிவிழாக் கண்டவர்கள்.

இன்று, மீண்டும் புதியதோர் தொழில்நுட்ப முறையில் நீங்கள் திருத்த முடியாது என்று நினைக்கும் எமெஜன்சிலைற் பற்றறிகளைத் திருத்தி சார்ச் செய்து உத்தரவாதத்துடன் கொடுக்கிறார்கள். இன்றே உங்கள் எல்லாவித எலக்ரோனிக், மின்சார தேவைகளுக்கும் நாடவேண்டிய இடம்,

**"விக்ரேஸ்"**
இல. 23 மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

**"நியூவிக்ரேஸ்"**
எலக்ரோனிக் கொம்பிளெக்ஸ்
இல 5 B. M. C. ஒழுங்கை
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

**"விக்ரர் அன் சன்ஸ்"**
இல. 100 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (4661)



தரமான கலைஞர்களின் ஒருங்கிணைப்பு – அங்கு
பல வித ராகங்களின் பரிணமிப்பு

**ராக மாலிகா இசைக்குழு**
வழங்கும்

## "இன்னிசை மழை"

இடம்: புனித பத்திரிசியார் கல்லூரி மண்டபம்
காலம்: 21-04-93
நேரம்: மு.ப. 8. 30 மணி
பி.ப. 2.30 மணி

நுழைவுச் சீட்டுகள் விற்பனையாகிக்கொண்டிருக்கின்றன

விளம்பர அன்பளிப்பு:

**ராகமாலிகா ஆடை அகம்,**

**ராகம் ஆடை அகம்**

இல. 3,4, நவீன சந்தை, யாழ்ப்பாணம் (6381)



**SUNRISE** குளிர் பானங்கள்
கோடியல்கள்

❋ சுத்தமானவை ❋ சுவையானவை

தயாரிப்பும் விநியோகமும்

SIVA INDUSTRIES
35/3 COLOMBOGAM ROAD, CHUNDIKULI
(சி-6386)


மானவராவார். (30)

### கருத்தரங்குகள்

(நெல்லியடி)

வடமராட்சிக் கோட்டத்தில், கரவெட்டி வலய, கணித ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு இம்மாதம் 19ஆம் திகதி காலை 8-30 மணிக்கு அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்திலும்,

பருத்தித்துறை வலய கணித ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு 21ஆம் திகதி காலை 8-30 மணிக்கு பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்திலும்,

வடமராட்சி வலய கணித ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு 23ஆம் திகதி காலை 8-30 மணிக்கு பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்திலும்,

வடமராட்சி கிழக்கு வலய விஞ்ஞான ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு 28ஆம் திகதி, பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்திலும்,

கரவெட்டி வலய விஞ்ஞான ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு 30ஆம் திகதி காலை 8-30 மணிக்கு அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்திலும் நடைபெறுமென வடமராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். செல்லத்துரை தெரிவிக்கின்றார். (30)

ளத்துடன் யாழ். பிரதேசத்தில் கடமையாற்றும் சகல அதிபர்களுக்கும் வழங்குமாறு யாழ். பிரதேச கல்விப்பணிமனை சகல கோட்டங்களுக்கும் அறிவித்துள்ளது.

இவ் அதிகாரிப்பின்படி அதிபர் தரம் 1இல் உள்ளவர்கள் ரூபா 1010/- உம் அதிபர் தரம் 2இல் உள்ளவர்கள் ரூபா 960/- உம். அதிபர் தரம் 3இல் உள்ளவர்கள் ரூபா 850-/வும் பெறக்கூடிய வகையில் இச் சம்பளம் உயர்த்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [17]

### சேவைக்காலப் பயிற்சி வகுப்பு

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பிரிவில் உள்ள பாடசாலைகளில் கணித பாடத்தைக் கற்பிக்கும் கணித ஆசிரியர்களுக்கான கணிதபாட சேவைக்காலப் பயிற்சி வகுப்பு ஒன்று கோப்பாயில் உள்ள மாவட்ட கணித விஞ்ஞான மூலவள நிலையத்தில் இம்மாதம் 19ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8-30 மணி முதல் மாலை 4-30 மணி வரை நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி வகுப்பில் தவறாது கலந்து கொள்ளுமாறு சகலகணிதபாடஆசிரியர்களும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.


## உடன் விற்பனைக்குண்டு

பிறவுண் பேட்டு குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
**"மல்லிகாபதி"**
சந்தை கிழக்கு ஒழுங்கை,
மானிப்பாய். (4664)



**ரேஸ்ரி** பழப்பான
விற்பனையாளர்களுக்கு

உங்களுக்கு தேவையான
பழப்பானங்களை
பின்வரும் எமது முகவர்களிடம்
பெற்றுக்கொள்ளலாம்.

வடமராட்சியில்
சாயிகிருஷ்ணா, வதிரி சந்தி, கரவெட்டி

தென்மராட்சி
அறிவகம், சாவகச்சேரி.

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.

[சி-6384]

நல்லூர் [illegible] நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

முதல் முயற்சியிலேயே வெற்றி பெற்று விட்டால், பிறருக்கு
அலுப்பு ஊட்டி அறுவையாய் இராமல் இருக்க முனைந்து முயன்று பார்.

ஃபிறாங்களின் ஜோன்ஸ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 11-04-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## இனப் பிரச்சினையில் சுதந்திரக் கட்சியின் பங்கு

அண்மையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சட்டத்தரணிகள்சங்கம் ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கொன்றில் பேசுவதற்கு அழைக்கப்பட்டிருந்த திரு. குமார் பொன்னம்பலம் பெரும் சிரமத்தின் மத்தியில் அவமான கரமாக வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் சட்டத்தரணிகளால் ஏற்பாடு செய்யபட்டிருந்த ''இனங்களுக்கிடையிலான அமைதியும் நிறைவேற்றப்படாத உடன்படிக்கைகளும்'' என்ற தலைப்பில் கருத்துரை கூற குமார் பொன்னம்பலம் அழைக்கப் பட்டிருந்தார். அவர் ஒரு தமிழர் என்ற ரீதியில் அழைக்கப்பட்டாரோ அன்றி ஒரு சட்டத்தரணி என்ற ரீதியில் அழைக்கப்பட்டாரோ என்பது தெரியவில்லை. ஆனால் விருந்தாளியாக அழைக் கப்பட்ட ஒருவரை மிகவும் வெட்கக் கேடானமுறையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சட்டத்தரணிகள் வெளியேற்றியுள்ளனர் என்பதே விடயம். அதாவது சுதந்திரக் கட்சியின் சட்டத்தரணிகள் பேரினவாத சிந்தனையில் எந்தளவிற்கு ஊறிப் போயுள்ளவர்கள் என்பதையும் யதார்த்தநிலையை ஏற்க முடியாதவர்களாகவும் உள்ளனர் என்பதையும் வெளிக்காட்டுவதாகவே இது உள்ளது.

திரு. குமார் பொன்னம்பலம் அவமானகரமாக வெளியேற்றப்பட்டமைக்கு காரணம் இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் இருப்பதற்கு சுதந்திரக் கட்சியும் காரணம் எனத் தெரிவித்தமையேஆகும். அதாவது''நாட்டில் இன்று எழுந்துள்ளபிரச்சினை, அதனால் நாட்டில் ஏற்பட்ட பொருளாதாரச் சீரழிவு, பின்னடைவு ஆகியவற்றிற்கு ஐக்கிய தேசிய கட்சியை மட்டும் குறை கூறமுடியாது. அதுதொடர்பான சம பொறுப்பை சுதந்திரக் கட்சியும் ஏற்க வேண்டும்'' என்பதே குமார் பொன்னம்பலம் கூறியதாகும். இதுவே அமளிதுமளிக்கும் சர்ச்சைக்கும் காரணமாகும்.

திரு. குமார் பொன்னம்பலம் அவ்வாறு என்ன விடயத்தை பெரிதாக புதியதாக கூறி விட்டார். இனப்பிரச்சினைக்கு இலங்கையை ஆட்சி புரிந்த இரு கட்சிகளுமே சமனான பொறுப்பு ஏற்கவேண்டும் எனக் கூறியதில் தவறு என்ன இருக்கின்றது. இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணவென காணப்பட்ட டப் பீ - செல்வா ஒப்பந்தத்தை ஐக்கிய தேசியகட்சி

## ரயில்மறிப்பு கிளர்ச்சி நடத்த தி.மு.க. அழைப்பு

### ஏப்ரல் 20இல் நடக்கும்

(சென்னை)

இந்தி எதிர்ப்பு கிளர்ச்சிக்கு மீண்டும் புத்துயிரூட்ட திராவிட முன்னேற்றக்கழகம் தீவிர முயற்சி செய்துவருகின்றது. தமிழ் நாட்டில்இந்தி திணிப்புக்கு எதிராக ஏப்ரல் 20ஆம் திகதி தமிழ் நாட்டைக் கடந்து செல்கின்ற சகலரயில்களையும் மாநிலத்துக்கு வந்துசேரும் சகல ரயில்களையும் மறிக்குமாறு சென்னைபுறநகர்ப்பகுதியில் உள்ள பீளமேடுவில் நடைபெற்ற தி.மு.கவின் 7ஆவது மாநில மாநாட்டின் இறுதியில் அலன் தலைவர் மு. கருணாநிதி கட்சித்தொண்டர்களை கேட்டுக் கொண்டார். அத்துடன் அன்றைய தினம் ரயிலில் பயணம் செய்ய வேண்டாமென்றும் பொதுமக்களுக்கு அவர் வேண்டுகோள் விடுத்தார்.

ரயில் மறியல் கிளர்ச்சிக்கு புறம்பாக மாநிலத்தில் இந்தி எழுத்துக்கள் பெயர்ப்பலகைகள் எங்கு காணினும் அவற்றை அழிக்குமாறும் இந்தி பேசாத மக்கள் மீதான குறிப்பாக தமிழ் நாடு மீதான இந்தித் திணிப்பு நிறுத்தப்படும்வரை தொடர்ச்சியாக போராட்டத்தை நடத்துமாறும் கருணாநிதிகட்சித்தொண்டர்களை வலியுறுத்திக் கேட்டிருக்கிறார்

இந்தித்திணிப்புக்கு எதிரான இந்த கிளர்ச்சியிலே சகலதமிழர்களும் தமிழை நேசிப்பவர்களும் காங்கிரஸ் உட்பட சகல கட்சிகளும் இணைந்து கொள்ளவேண்டும் என்றும் அவர் மேலும் கேட்டுக்கொண்டார்.

மாநில மாநாட்டின் முடிவில் 90 நிமிடங்கள் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது: இந்தித்திணிப்பு தமிழ்பேசும் மக்களை நாட்டின் இரண்டாந்தரப் பிரஜைகளாக்கிவிடும்.

இந்தி பேசாத மக்கள் விரும்பும்வரை உத்தியோக பூர்வ மொழியாக ஆங்கிலம் தொடர்ந்திருக்கும் என்று முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு அளித்த உறுதிமொழியை அழித்தே தி.மு.க. 1960களில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைக் கைவிட்டது.

நாட்டின் ஐக்கியத்தைப் பேணிக் காப்பதற்குப் பொது மொழியொன்று இருக்க வேண்டுமென்ற தேவையில்லை. கனடா மற்றும் ஆபிரிக்க நாடுகளிலே பலமொழிகளைப் பேசும் மக்கள் வாழ்கிறார்கள். அங்கெல்லாம் மக்கள் பேசும் மொழிகள் அனைத்துக்குமே தேசிய மொழிகள் அந்தஸ்து வழங்கப்பட்டிருக்கிறது.

இந்திய அரசியலமைப்பின் எட்டாவது பட்டியலிலே குறிப்பிடப்பட்டிருக்கும் சகல மொழிகளுக்கும் உத்தியோக பூர்வ மொழி அந்தஸ்து வழங்கப்பட வேண்டும்.

ஐக்கியத்தின் பேரால் இந்தி பேசாத மக்கள் மீது இந்தியை திணிப்பதற்கு மேற்கொள்ளப் படும் சகல முயற்சிகளுமே தீட்சண்யமாக எதிர்க்கப்பட வேண்டும்.

இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் இணைப்பு மொழியாகத் தொடர வேண்டும். அதேவேளை இந்தியைப் போல தமிழும் இந்தியாவின் தேசிய மொழியாகவும், உத்தியோகபூர்வ மொழியாகவும் பிரகடனப்படுத்தப் பட வேண்டும் என்றார்.

### மத்திய அமைச்சர் கண்டனம்

[சென்னை]

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, பிரதமர் நரசிம்மராவையும் காங்கிரஸ் கட்சியையும் குறைகூறுவதை மத்திய அரசின் நல்வாழ்வுத்துறை இணையமைச்சர் ஏ.வி. தங்கபாலு கண்டித்துள்ளார்.

## பூபதி அன்னை என்ற புயல்

விடுதலைப் போராட்ட வீதியில் ஒளியுமிழ்
விளக்கெனத் திகழும் தாய் பூபதி!
படுகொலை இந்தியப் படையினர் முகத்தினை
பாரினுக்[கு] உணர்த்திய மாமதி!
அடிமைக ளாயெமை ஆண்டிட எண்ணிய
அந்நியர் முன்னெழு தீயிவள்!
விடிவினை வரித்திட விரைந்தெழு வீரென
விழித்தெழ வைத்தநற் தாயிவள்!

தென்தமி ழீழத் திசையினி லேயொரு
தென்றலாய் அன்னை உதித்தவள்!
இன்தமி ழீழ இருள்கலைந் தோட்டிட
எழுபுய லாய்க்களம் குதித்தவள்!
''வன்முறை யுத்தம் கைவிட்டுப் பேச்சு
வார்த்தைசெய் வீரெனக் கோரினாள்''
அந்நிய ஆதிக்க இந்திய வன்படை
ஆணவம் கண்டன்னை சீறினாள்!

மாமாங்க ராலய வீதியிலே அந்த
மாமகள் நோன்பினை மேற்கொண்டாள்!
வாரங்கள் போயொரு மாதத்தின் நிறைவிலே
மரணத்தின் வரவினைத் தான்கண்டாள்!
சோரங்கள் போயிடார் துணிந்தவர் என்பதைச்
சொல்லாது செயலிலே காட்டினாள்!
வாருங்கள்! அன்னையை வாழ்த்துமிந் நாளிலே
வாஞ்சை யோ[டு]களம் நோக்குவோம்.

நிலா தமிழின் தாசன்

## பாப்பரசர் அலுவலகத்தில் பணம் திருட்டு

(வத்திக்கான்)

வத்திக்கானில் உள்ள பாப்பரசரின் அலுவலகத்தில் ஒரு தொகைப்பணம் திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பாப்பரசரின் பத்திரிகை அலுவலகத்தினுள் இரவில் நுழைந்த திருடர் கோஷ்டி பணத்தை திருடிச் சென்றதாகக் கூறப்படுகின்றது.

கிறீஸ்தவர்களின் தவகால தினத்தில் நடைபெற்ற இத் திருட்டு குறித்து வத்திக்கான் பொலிஸிடம் பாப்பரசர் அலுவலகம் முறையீடு செய்துள்ளது.

## இந்திய இராணுவத்திற்கு புதிய தளபதி நியமனம்

(டில்லி)

லெப். ஜெனரல் பி. ஸி. ஜோஷி இந்தியாவின் அடுத்த இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். இந்தியாவின் தற்போதைய இராணுவத் தளபதியான பி. ஆர் றொட்றிக்கோஸ் எதிர்வரும் ஜூன் 30 ஆம் திகதி முதல் ஓய்வு பெற இருப்பதையடுத்து அப்பதவிக்கு பி. ஸி. ஜோஷி ஜூலை முதலாம் திகதி முதல் பதவியேற்கவுள்ளார்.

பரமவசிட்ட சேவா பதக்கம் பெற்றவரான பி. ஸி. ஜோஷி தற்போது மேற்கு பிராந்திய இராணுவத் தளபதியாக இருந்து வருகிறார்.

## ஈராக்கிய நிலைகள் மீது அமெரி. விமானம் தாக்குதல்

(பக்தாத்)

ஈராக் நாட்டின் வடபகுதியில் விமானங்கள் பறப்பதற்கு தடை விதிக்கப்பட்டிருக்கும் பகுதியில் இருக்கும் சதாம் அணைக்கட்டுப்பகுதியில் இருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் விமான எதிர்ப்பு பீரங்கிகளை வைத்திருக்கும் ஈராக்கிய நிலைகள் மீது அமெரிக்க போர் விமானங்கள் அபாயகரமான இலட்

இப் பகுதிக்கு மேலாக வழமையான ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த அமெரிக்க விமானங்கள் மீது ஈராக்கியர்கள் தாக்குதல் நடத்தியதாகவும் வாஷிங்டனில் வெளியுறவுத் துறை அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். எனினும் தாக்குதலில் ஈடுபட்ட அமெரிக்க விமானங்கள் பாதுகாப்பாக தளத்திற்கு திரும்பியதாகவும்

## தமிழக பொலிசாரின் கவனம் இனிமேல்தீவிரமாகவேண்டும்

எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம்

(சென்னை)

தமிழ்நாடு காவல்துறையின் கவனம் இனிமேலும்வேறு திசைகளில் திருப்பப்படாமல் வீரப்பன் போன்ற ஆட்களைப் பிடிப்பதில் தீவிரமாகச் செயற்படவேண்டும் என்று தமிழக சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில், கண்ணிவெடிக்கலாசாரம்இவ்விதம் பரவுவதையிட்டு அரசு அதிகம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

## தமிழ்மொழியை அமுலாக்காத அலுவலர் தண்டிக்கப்படுவர்

### தமிழக அரசு அறிவிப்பு

(சென்னை)

தமிழ்மொழியை முழுமையாக ஆட்சிமொழியாகப்பயன்படுத்த மாநில அரசு எடுக்கும் நடவடிக்கைகளோடு ஒத் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், தமிழ் மொழியை அமுலாக்க ஒத்துழைக்காத அதிகாரிகளுக்கு பதவி உயர்வு மறுப்பு உட்

### விளையாட்டு

[தென்மராட்சி]

யா / கச்சாய் அரசினர் வித்தியாலயத்தின் வருடாந்த மெய்வல்லுநர்போட்டி நாளை திங்கட்கிழமை பி. பகல் 2மணிக்கு அதிபர் திரு. ந நவரட்ணராஜா அவர்களின் தலைமையில் இடம்பெறும்.

இதற்கு பிரதம விருந்தினராக திரு. பொ வீரபத்திரன் [பிரதிக் கல்விப் பணிப்பாளர் சாவகச்சேரி] அவர்களும், சிறப்பு விருந்தினராக விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (86)

❋

[யாழ்ப்பாணம்]

யாழ். செயலகத்தினால் நடாத்தப்பட்ட கூடைப் பந்தாட்டப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணி சம்பியனானது.

யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் 'ஷப்றா' அணியை எதிர்த்து விளையாடிய பல்கலைக் கழக அணி 44:46 என்ற பந்துகளைப் போட்டு பல்கலைக் கழக அணி சம்பியனானது.

யாழ். பல்கலைக்கழக அணியின் சார்பில் விளையாடிய பி. இராகுலன் சிறப்பாக விளையாடி ரசிகர்களின் பாராட்டைப் பெற்றவராவார். இவர் பல்கலைக்கழக கூடைப் பந்தாட்ட அணியின் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது. (42) (05)

❋

[யாழ்ப்பாணம்]

போயுள்ளவர்கள் என்பதையும் யதார்த்தநிலையை ஏற்க முடியாதவர்களாகவும் உள்ளனர் என்பதையும் வெளிக்காட்டுவதாகவே இது உள்ளது.

திரு. குமார் பொன்னம்பலம் அவமானகரமாக வெளியேற்றப்பட்டமைக்கு காரணம் இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் இருப்பதற்கு சுதந்திரக் கட்சியும் காரணம் எனத் தெரிவித்தமையேஆகும். அதாவது''நாட்டில் இன்று எழுந்துள்ளபிரச்சினை, அதனால் நாட்டில் ஏற்பட்ட பொருளாதாரச் சீரழிவு, பின்னடைவு ஆகியவற்றிற்கு ஐக்கிய தேசிய கட்சியை மட்டும் குறை கூறமுடியாது. அதுதொடர்பான சம பொறுப்பை சுதந்திரக் கட்சியும் ஏற்க வேண்டும்'' என்பதே குமார் பொன்னம்பலம் கூறியதாகும். இதுவே அமளிதுமளிக்கும் சர்ச்சைக்கும் காரணமாகும்.

திரு. குமார் பொன்னம்பலம் அவ்வாறு என்ன விடயத்தை பெரிதாக புதியதாக கூறி விட்டார். இனப்பிரச்சினைக்கு இலங்கையை ஆட்சி புரிந்த இரு கட்சிகளுமே சமனான பொறுப்பு ஏற்கவேண்டும் எனக் கூறியதில் தவறு என்ன இருக்கின்றது. இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணவென காணப்பட்ட டட்லி - செல்வா ஒப்பந்தத்தை ஐக்கிய தேசியகட்சி கிழித்தெறிந்த தென்றால் அதற்கு முன்னோடியாக பண்டா - செல்வா ஒப்பந்தத்தைக் கிழித் தெறிந்து அதற்கு வழிகாட்டியவர்கள் சுதந்திரக்கட்சியினர் எனக் கூறுவதில் என்ன தவறு.

இதேபோன்று 1978 ஆம் ஆண்டு அரசியல் அமைப்புச் சட்டத்தை ஐக்கிய தேசிய கட்சி மாற்றி அமைத்ததென்றால், அதற்கு முன்னோடியாக அமைந்தது 1972ஆம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக்கட்சி தனது மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்டு அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்றி சிறுபான்மையினரின் அரசியல் அமைப்பு ரீதியான பாதுகாப்பினை கேள்விக்குரிய தாக்கியது. இதை சுதந்திரக்கட்சியில் உள்ளவர்களால் மறுக்க முடியுமா?

மேலும், அவசரகால சட்டத்தின் கீழ் பல வருடங்கள் தொடர்ச்சியாக ஆட்சி நடத்துவதற்கும், தமது விருப்பிற்கேற்ப தேர்தல் சட்டங்களை மாற்றியமைத்ததிற்கும் வழிகாட்டியவர்களும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியினரே

இறுதியாக, பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் முன் ஒரு திட்டத்தை முன் வைக்காது ஐ தே. கட்சி போன்று சுதந்திரக் கட்சியும் காலத்தை இழுத்தடித்த பின்னர் தற்பொழுது தெரிவுக்குழுவில் இருந்தும் வெளியேறியுள்ளது.

இந்நிலையில் குமார் பொன்னம்பலம் இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் இருப்பதற்கு ஐக்கிய தேசியக்கட்சிக்கு எவ்வளவு பங்குண்டோ அதே போல் எதிர்க்கட்சிக்கும் உண்டு எனக் கூறியதில் எதுவித தவறும் இல்லை. அவ்வாறு இல்லாவிட்டால் இனப்பிரச்சினையைத் தீர்த்துவைப்பதில் சுதந்திரக்கட்சி ஆற்றிய பங்கு பணிகளை வெளியிட முடியுமா? அல்லது எதிர்வரும் மே மாதம் 17ஆம் திகதி நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் ஆயினும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய திட்டம் எதையும் சுதந்திரக் கட்சியால் முன்வைக்க முடியுமா?

இதைவிடுத்து உண்மை நிலையைக் கூறியமைக்காக திரு. குமார் பொன்னம்பலத்தை அவமானப்படுத்தி வெளியேற்றியமை, இனப்பிரச்சினை தீர்விற்கு சிங்கள பேரினவாதிகள் இன்னமும் நீண்ட தூரம் வரவேண்டியுள்ளதைக் காட்டுவதாகவுள்ளது. அதாவது, இனப்பிரச்சினை அரசியல் தீர்வென்பது அண்மையில் சாத்தியமாகாததொன்று என்பதை வெளிக்காட்டுவதாகவுள்ளது என்றால் தப்பில்லை.

## தமிழக பொலிசாரின் கவனம் இனிமேல்தீவிரமாகவேண்டும்

### எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம்

(சென்னை)

தமிழ்நாடு காவல்துறையின் கவனம் இனிமேலும்வேறு திசைகளில் திருப்பப்படாமல் வீரப்பன் போன்ற ஆட்களைப் பிடிப்பதில் தீவிரமாகச் செயற்படவேண்டும் என்று தமிழக சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில், கண்ணிவெடிக்கலாசாரம்இவ் விதம் பரவுவதையிட்டு அரசு அதிகம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

## தமிழ்மொழியை அமுலாக்காத அலுவலர் தண்டிக்கப்படுவர் தமிழக அரசு அறிவிப்பு

(சென்னை)

தமிழ்மொழியை முழுமையாக ஆட்சிமொழியாகப்பயன்படுத்த மாநில அரசு எடுக்கும் நடவடிக்கைகளோடு ஒத்துழைக்காத அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழக கல்வி அமைச்சர் அரங்கநாயகம் கூறியுள்ளார்.

கோயம்புத்தூரில் தமிழ் மொழி வளர்ச்சித்துறை ஏற்பாடு செய்த கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், தமிழ் மொழியை அமுலாக்க ஒத்துழைக்காத அதிகாரிகளுக்கு பதவி உயர்வு மறுப்பு உட்பட தண்டனைகள் வழங்கப்பட இருப்பதாகவும். தமிழ் மொழி வளர்ச்சியில் ஊக்கம் காட்டும் அதிகாரிகளுக்கு பதவி உயர்வும் ஏனைய சலுகைகளும் வழங்கப்பட இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

## மே. வங்காளத்தில் புயல் நூற்றுக்கதிகமானோர் பலி

[கல்கத்தா]

மேற்கு வங்காளத்தின் முசிராபாத் மாவட்டத்தில் நேற்று முன்தினம் வீசிய கடும் புயலில் சிக்கி நூற்றுக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் இருநூறுக்கும் அதிகமானோர் காயம் அடைந்துள்ளனர்.முசிராபாத் மாவட்டத்தின் ஆறு கிராமங்களில் வீசிய கடும்புயலால் வீதிகள் பலவும் சேதமாக்கப்பட்டுள்ளதோடு, மரங்களும், மின்சார கம்பங்களும் சரிந்து விழுந்திருப்பதுடன், வீடுகளும் கடுமையாக சிதைக்கப்பட்டுள்ளன.

## நேட்டோ விமானங்கள் பொஸ்னியாவில் ரோந்து

(சரஜேவோ)

அமெரிக்கா, பிரான்ஸ், நெதர்லாந்து ஆகிய நேட்டோ நாடுகளைச் சேர்ந்த யுத்த விமானங்கள் திங்கள் நண்பகல் முதல் பொஸ்னிய வான்பரப்பில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடும். நேட்டோ அணி உருவாக்கப்பட்ட பின் மேற்கொள்ளப்படும் முதல் இராணுவ நடவடிக்கை இதுவாகும்.

இந்த 3 நாடுகளையும் சேர்ந்த 70 இற்கும் அதிகமான விமானங்கள் ரோந்தில் ஈடுபடும். தடை வலயத்தினுள் செல்லும் சேர்பிய யுத்தவிமானங்களை அல்லது வேறுவிமானங்களை சுட்டு வீழ்த்துவதற்கான அதிகாரம் ஐ நா வினால் வழங்கப்பட்டுள்ளது. எனினும் பல தடவை எச்சரித்த பின் இறுதி நடவடிக்கையாகவே இது மேற்கொள்ளப்படும்.

நேட்டோவின் எப் - 16 ரக போர் விமானங்களில் பல தற்போது இத்தாலிய தளத்தில் தரித்துள்ளன. சில அமெரிக்க போர் விமானங்கள் விமானந்தாங்கிக் கப்பல் ஒன்றிலிருந்து பொஸ்னியா நோக்கிச் செல்லும்.

## பாக்.இலிருந்து 70 அரபுகள் உடன் வெளியேற உத்தரவு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் இருக்கும் எழுபதிற்கும் மேலான அரபு நாட்டவர்களை உடனடியாக அங்கிருந்து வெளியேறும்படி பாகிஸ்தான் அரசு பணித்துள்ளது. பாகிஸ்தானின் வடமேற்கு நகரமான பெஷாவரில் அண்மையில், கைதானவர் இருநூறுபேரில் இந்த எழுபது பேரும், அடங்குவர் என்றும், அடிப்படைவாத இஸ்லாமிய அமைப்புக்களுடன் இவர்களுக்கு தொடர்பு இருப்பதாக பல அரபு அரசுகளும் குற்றம்சாட்டி இருப்பது குறிப்பிடத்தக்கது.

(டில்லி)

லெப். ஜெனரல் பி. ஸி. ஜோஷி இந்தியாவின் அடுத்த இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். இந்தியாவின் தற்போதைய இராணுவத் தளபதியான பி. ஆர் றொட்றிக்கோஸ் எதிர்வரும் ஜூன் 30 ஆம் திகதி முதல் ஓய்வு பெற இருப்பதையடுத்து அப்பதவிக்கு பி. ஸி. ஜோஷி ஜூலை முதலாம் திகதி முதல் பதவியேற்கவுள்ளார்.

பரமவசிட்ட சேவா பதக்கம் பெற்றவரான பி. ஸி. ஜோஷி தற்போது மேற்கு பிராந்திய இராணுவத் தளபதியாக இருந்து வருகிறார்.

## ஈராக்கிய நிலைகள் மீது அமெரி. விமானம் தாக்குதல்

(பக்தாத்)

ஈராக் நாட்டின் வடபகுதியில் விமானங்கள் பறப்பதற்கு தடை விதிக்கப்பட்டிருக்கும் பகுதியில் இருக்கும் சதாம் அணைக்கட்டுப்பகுதியில் இருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் விமான எதிர்ப்பு பீரங்கிகளை வைத்திருக்கும் ஈராக்கிய நிலைகள் மீது அமெரிக்க போர் விமானங்கள் அபாயகரமான கிளட்சர் ரக குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தியுள்ளன

இப் பகுதிக்கு மேலாக வழமையான ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த அமெரிக்க விமானங்கள் மீது ஈராக்கியர்கள் தாக்குதல் நடத்தியதாகவும் வாஷிங்டனில் வெளியுறவுத் துறை அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். எனினும் தாக்குதலில் ஈடுபட்ட அமெரிக்க விமானங்கள் பாதுகாப்பாக தளத்திற்கு திரும்பியதாகவும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## தினேஷ்சிங் - பிரேமா டாக்காவில் பேச்சுக்கள்

[டாக்கா]

இந்தியாவின் குடியரசுத் தலைவரான டாக்டர் சங்கர் தயாள் சர்மா இந்த ஆண்டின் இறுதிக்கு முன்பாக இலங்கை விஜயம் ஒன்றை மேற்கொள்ளலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தியாவின் வெளியுறவு அமைச்சர் தினேஷ்சிங் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவுடன் நேற்று முன்தினம் டாக்காவில் இருக்கும் செல்டன் ஹோட்டலில் போச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இந்தப்பேச்சுக்களின் போது சார்க் பிராந்திய நாடுகளின் எதிர்கால ஒத்துழைப்பு தொடர்பாகவும், இந்திய குடியரசுத்தலைவரின் சிறிலங்கா விஜயம் தொடர்பாகவும், இரு நாட்டு எல்லைக்குஇடையிலும் மீன்பிடித் தொழில்ஈடுபடுவோர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிஸ்கட் எடுத்து வரவும் இராணுவம் கட்டுப்பாடு

(வவுனியா)

இராணுவ சோதனைச்சாவடி ஊடாக பிஸ்கட் வகைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எடுத்து வருவதற்கே சிறிலங்கா இராணுவம் அனுமதித்துள்ளது.

குறிப்பிட்ட அளவிற்கு அதிகமாக எடுத்து வரப்படும் பிஸ்கட் வகைகள் பறிமுதல் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (தீ)

## அதிபரிடம் தகவல் பெறுவதை தவிர்க்குக

யாழ் மாவட்டத்தில் உள்ள உதவி அரசாங்க அதிபர்கள் கல்வி சம்பந்தமாக தாம் நடாத்தும் கூட்டங்கட்கு உரியபாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்களை அழைப்பதுடன் பாடசாலை பற்றிய ஆவணங்களை தமக்கு சமர்ப்பிக்குமாறு கோருவதாகவும் இது தற்போதைய நிர்வாக அமைப்பு விதிகளுக்கு முரணானது எனவும் இதனை தவிர்க்குமாறு இவ் உதவி அரசாங்க அதிபர்களுக்கு கட்டளையை அனுப்பி வைக்குமாறு யாழ் பிரதேசகல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் யாழ் அரசாங்க அதிபருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அத்துடன் உரியதகவல்களை யாழ்கல்வித்திணைக்களத்தின் மூலம் பெறுமாறுஇவர்களுக்கு பணிக்குமாறும்அரச அதிபரை மேலும்அவர் இக்கடிதம்மூலம் கேட்டுள்ளார். (17)

## புளொட் குழுவினர் துப்பாக்கிப்பிரயோகம்

[வவுனியா]

தென்பகுதியிலிருந்து வடக்கு நோக்கி வரும் வடபகுதி தமிழ்ப்பயணிகளை கூலிக்கு ஏற்றிப் பிழைக்கும் இளைஞர்களை நோக்கி புளொட் குழுவினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்த போதிலும் எவரும் பாதிக்கப்படவில்லை

பிக்கவுள்ளனர். (86)

❋

[யாழ்ப்பாணம்]

யாழ். செயலகத்தினால் நடாத்தப்பட்ட கூடைப் பந்தாட்டப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணி சம்பியனானது.

யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் 'ஷப்றா' அணியை எதிர்த்து விளையாடிய பல்கலைக் கழக அணி 44:46 என்ற பந்துகளைப் போட்டு பல்கலைக் கழக அணி சம்பியனானது.

யாழ். பல்கலைக்கழக அணியின் சார்பில் விளையாடிய பி. இராகுலன் சிறப்பாக விளையாடி ரசிகர்களின் பாராட்டைப் பெற்றவராவார். இவர் பல்கலைக்கழக கூடைப் பந்தாட்ட அணியின் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது. (42) (05)

❋

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக அணிக்கும், ஜொனியன்ஸ் அணிக்குமிடையிலான ஐம்பது ஓவர் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் ஆட்டம் இன்று காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக் கழக புதிய மைதானத்தில் இடம்பெறவுள்ளது. யாழ். பல்கலைக்கழக அணிக்கு ஜெ. அன்ரன் ராஜகாரியர் தலைமை தாங்குவார் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

❋

## காட்சி உதைபந்தாட்டம்

குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழகம் உயிர்த்த ஞாயிறு தினமாகிய இன்று காட்சி உதைபந்தாட்டப் போட்டிகளை குருநகர் விளையாட்டுமைதானத்தில்நடாத்த உள்ளது. இப்போட்டிகள் 2-45 மணிக்கு ஆரம்பமாக உள்ளன.

பாடுமீன் பீயை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக அணியும், யங்றோயல் அணியை எதிர்த்து ஸ்ரீமுருகன்அணியும், பாடுமீன் ஏயை எதிர்த்து பாஷையூர் சென் அன்ரனிஸ் கழகமும் அன்றைய தினம் மோத உள்ளன. (21)'(17)

## வீரவணக்கக் கூட்டம்

4-ம் மாதங்களில் [ஏப்பிரல்) வீரச்சாவைத் தழுவிக் கொண்ட தென்மராட்சிக் கோட்டகைதடிவட்டத்திற்குட்பட்ட மாவீரர்களுக்கானவீர வணக்கக்கூட்டம் இன்று இரவு 8.00மணிக்குகோயிலாக்கண்டி கடற்கரையில் நடைபெறும் இவ்வீர வணக்கக் கூட்டத்தில்

விடுதலைப்புலிகளின் சிறப்புப்பேச்சாளர்கள் நினைவுரைகளை நிகழ்த்தவுள்ளதுடன் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. [90]

ஈழநாதம்

# 200 தபால் பொதிகள் கொழும்பில் தேக்கம்

[யாழ்ப்பாணம்]

வடபகுதிக்கு அனுப்புவதற்காக 200க்கு மேற்பட்ட தபால் பொதிகள் தொடர்ந்தும் கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் தேங்கியிருப்பதாக கொழும்பு தபால் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த 7-ம் திகதி வரை மேற்படி தபால்கள் பரிவர்த்தனை நிலையத்தில்இருவாரங்களுக்கு மேலாக தேங்கியிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். இதற்குப் பின்னர் கொழும்பு வந்த தபால்பொதிகள் யாழ்ப்பாணம் அனுப்பப்பட்ட போதும் இத்தபால் பொதிகள்மட்டும் தொடர்ந்து அதே இடத்தில் இருப்பதாக அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

### விசேட ஆட்சிக்குழுக் கூட்டம்

உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கம் இலங்கைக் கிளையின் விசேட ஆட்சிக்குழுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பி. ப. 4-00 மணிக்குஇல. 33, பருத்தித்துறை வீதியில் உள்ள இயக்கப்பணிமனையில் இயக்கத்தலைவர் திரு. எஸ். சண்முகலிங்கம் தலைமையில் இடம் பெறும்.

## மணலாறு மினிமுகாம் தகர்ப்பில் வீரச்சாவடைந்த போராளிகள்



கப், அதியமான் (வெஸ்ரர்)
கதிரவேல் ஞானசேகரம்
மன்னார்.



லெப். திருவள்ளுவர் (குணபால்)
சரவணமுத்து ஜெயக்குமார்
மாதகல்.



லெப்.தமிழ்க்கோ (கேதுராஜ்)
சந்திரசேகரம் உதயகுமார்
மட்டக்களப்பு.







## பெறுபேறு மீளாய்வு

[யாழ்ப்பாணம்]

கல்வி பொது தராதர [சா. தர] பரீட்சை 1992 இற்கான பெறுபேறு மீளாய்விற்கான விண்ணப்ப முடிவுத் திகதி இம் மாதம் 30 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பெறுபேறு மீளாய்விற்கு ஒரு பாடத்திற்கு மீளாய்வுக் கட்டணம் அறுபது ரூபா ஆகும். இக்கட்டணத்தை முத்திரையாக விண்ணப்பப்படிவத்தில் ஒட்டி இருத்தல் வேண்டுமென விண்ணப்பதாரிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பாடசாலைப் பரீட்சார்த்திகள் அதிபர்களூடாகவும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் நேரடியாக பரீட்சைத் திணைக்களத்துடனும் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். [பா]

இடம்

வடிக்கை மேற்கொள்ளஇருப்பதாக அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம் தெரிவித்தது. மேலும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் கோப்பாய் பிரிவினரும் மக்கள் நலன்காக்கும் கழகத்தினரதும் மக்களுக்கான தேவைகளை கவனித்து வருகின்றனர்.

அகோர

(வயது 21) ஆகியோர் படுகாயமடைந்தனர். மேலும் ஒரு பெண்மணி மயக்கமடைந்தார்.

இதேவேளை நேற்று காலை 6. 30 மணியளவில் வல்வெட்டித்துறைப் பகுதிக்கு வந்த புக்காரா விமானங்கள் இரண்டு தடவைகள் வட்டமிட்டபின் வல்லைப் பகுதிச் சென்று தாக்குதலை நடாத்தியது.

வல்லையூடாக வந்த பயணிகள், உத்தியோகத்தர்கள், வியாபாரிகள் பலரும் தாக்குதலுக்கு இலக்காக நேரிட்டபோதிலும் பாலத்தினுள் மறைந்துகொண்டதினால் தப்பித்துக்கொண்டனர். எனினும் வியாபாரிகளது வாழைக்குலை, மரக்கறி போன்றவை சேதமடைந்தன.

பிற்பகல் ஒருமணிக்கு பின்னர் தாக்குதல்கள் குறைவடைந்தன. இருந்தபோதிலும் ஓரிரு ஆட்லறி எறிகணைகள் ஆங்காங்கு விழுந்து வெடித்தன. குண்டுவீச்சு விமானங்களும் பறந்து திரிந்ததையும் அவதானிக்க முடிந்தது. (யோ)

## வீரப்பனைப் பிடிக்க கூட்டுத் தேடுதல்

[சென்னை]

இருபத்திரண்டு பேரை நேற்று முன்தினம் கொன்ற சந்தணக் கட்டை கடத்தல் வீரப்பன் கோஷ்டியைப் பிடிப்பதற்காக சலவைக்கல்காட்டுப் பகுதிகளில் தமிழ் நாடு பொலிஸின் துணையுடன் கர்நாடகப் பொலிஸ் தேடி வருகிறது.

வீரப்பனின் கண்ணி வெடியில் சிக்கிக் காயமுற்றவர்களைப் பார்த்து ஆறுதல் கூறுவதற்காக தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தமிழக அரசின் தலைமைச் செயலருடன் நேற்றுச் சேலம் சென்றார்.

சந்தனக் கட்டை கடத்தல் வீரப்பனைக் கைது செய்வதற்கு இராணுவத்தின் உதவியை நாடுமாறு கர்நாடக சட்டப் பேரவையின் எதிர்க் கட்சித் தலைவர் முதலமைச்சர் வீரப்ப மொய்லியைக் கேட்டுள்ளார்.

யாழ் மத்திய

நேற்று மாலை விடுதலைப் புலிகள் அரசியற் துறையின் யாழ். மாவட்ட செயலகத்தில் நடாத்திய பத்திரிகையாளர் சந்திப்பின்போது மேற்படி தகவல்கள் தெரிவிக்கப்பட்டன.

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. ஜவான், யாழ். மாநகர ஆணையாளர் திரு வி. பி. பாலசிங்கம், பொறியியலாளர்கள் திரு எஸ். பி. ஜெயலிங்கம், திரு. ம. இராமதாஸ், உள்ளூராட்சித் திணைக்கள இணைப்பாளர் திரு மா. பாபு, தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுக்கழக உட்கட்டுமானப் பகுதியைச் சேர்ந்த திரு. சி. ரவிராஜ் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

போதிய திட்டமிடலின்றி தோற்றுவிக்கப்பட்ட தற்போதைய பஸ் நிலையம் எதிர்கால நகர வளர்ச்சிப் போக்கில் உசிதமற்ற பகுதியில் காணப்படுவதாலும் பொது மக்களின் எதிர்கால நன்மை கருதியும் மேற்படி இடமாற்றம் செய்யப்படுகிறது.

தற்போதைய பஸ் நிலையம் தொடர்ந்து இதே இடத்தில் இருந்தால் எதிர்கால நோக்கில் அதிக வாகனத் தடை ஏற்படும். மற்றும் நகரில் ஒரு பகுதி அபிவிருத்தியே சாத்தியப்படும், சூழல் மாசடையும் எதிர்கால விஸ்தரிப்புக்கு போதிய இடவசதி இல்லை, தற்போதைய இடத்தில் உருவாக்கப்பட இருக்கும் பசும் சோலைக்கு தடையாக இருக்கும். இதுபோன்ற பல பிரதிகூலமான விளைவுகளைத் தவிர்க்கும் முகமாகவுமே மேற்படி இடமாற்றம் செய்யப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது.

உருவாக்கப்பட இருக்கும் புதிய பஸ் நிலையத்தில் பயணிகளுக்கான தங்குமிடவசதி பொழுதுபோக்கு மையம். சிற்றுண்டிச்சாலை மலசலகூடங்கள் ஆகியவை உட்பட சகல வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. இவ்விடத்தில் மேலதிக வர்த்தக நிலையங்கள் எதுவும் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

மேலும் குடாநாட்டின் அனைத்துப் பகுதியில் இருந்தும் பஸ்நிலையத்துக்கு வரும் பஸ் வண்டிகளும், பஸ் நிலையத்திலிருந்து வெளியேறும் பஸ் வண்டிகளும் நகரப் பகுதியூடாகவே செல்லும் என்றும் நகரின் குறிப்பிட்ட பகுதிகளில் பஸ் தரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.

வைக்க மாவீரர் வீரவேங்கை சத்தியனின் தந்தை திரு. பரமசாமி அவர்கள்நாடாவை வெட்டி ஆரம்பித்துவைத்தார். வன்னி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. மனோவும், வர்த்கர்களும், பொது மக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து விஸ்வமடு பூநகரி போன்ற தூரஇடங்களுக்கு வந்த தந்திகள் உடன் விநியோகிக்கப்பட்டன.

## சீருடையுடன் கூடவும்

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சகல சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவினரையும், யாழ்ப்பாணம், காங்கேசன்துறை மாவட்டங்களைச் சார்ந்த சாரணர்கள், திரிசாரணர்கள் மற்றும் தொண்டர் ஸ்தாபன சேவையாளர்களையும்அகாலமரணமடைந்தஇல. செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை உபதலைவர் திரு. புவனேந்திரன் அவர்களுக்கு இறுதியஞ்சலி செலுத்துமுகமாக சீருடையுடன் இன்று பி. ப. 1. 30 மணிக்கு அன்னாரின் கந்தர்மட இல்லத்தில் கூடுமாறு அப்பிரிவு சார்ந்த ஆணையாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

## புத்தாண்டு அன்று தற்காப்பு மட்டுமாம்

[கொழும்பு]

தமிழ். சிங்கள புத்தாண்டையொட்டி தற்காப்பு நடவடிக்கைகளை மட்டுமே இராணுவத்தினர் மேற்கொள்வார்கள் என்று அரசு அறிவித்துள்ளது

## சிரச்சேதம்

சவூதி அரேபியாவில் போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்பு பட்டிருப்பதாகக் கூறப்படும் மூவருக்கு சிரச் சேதம் செய்யப்பட்டுள்ளது. இந்த மூவரில் ஒருவர் சவூதி அரேபியாவைச் சேர்ந்தவர் என்றும். மற்ற இருவரும் பாகிஸ்தானியர் என்றும் இத் தண்டனை கடந்த வெள்ளியன்றிரவு நிறைவேற்றப்பட்டதாகவும் மேலும் தெரியவருகின்றது

மானிப்பாய்

பாய் இந்துக்கல் லூரியில் அமைக்கப்பட்டுள்ள விசேட மேடையில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்படும்.


இதனைத் தொடர்ந்து ஊர்வலமாக கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு புதைகுழிகளில் விதைக்கப்படும்.

## கண்ணீர் அஞ்சலி

கடமையின் போது அகாலமரணமெய்திய இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை உப தலைவரும் இணைய பிரதிநிதிகளில் ஒருவருமாகிய திரு. கந்தையா புவனேந்திரன் அவர்களுக்கு

## எமது கண்ணீர் அஞ்சலி


அவரைப் பிரிந்த அன்னாரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.



கப், அதியமான் (வெஸ்ரர்)
கதிரவேல் ஞானசேகரம்
மன்னார்.



லெப். திருவள்ளுவர் (குணபால்)
சரவணமுத்து ஜெயக்குமார்
மாதகல்.



லெப். தமிழ்க்கோ (கேதுராஜ்)
சந்திரசேகரம் உதயகுமார்
மட்டக்களப்பு.



லெப். கலைக்கோன் (ஜெயந்தன்)
ஜெயக்கொடி ஜெரூபன்
உரும்பராய்.



லெப். தொல்காப்பியன் (சூரி)
சுப்பிரமணியம் சோமசுந்தரம்
நல்லூர்.



லெப். அழகுமுத்து (சாள்ஸ்)
சீனத்தம்பி கோணேசநிதி
மட்டக்களப்பு.




லெப். அரிமாநம்பி (கிலோஜன்)
காசுபதி மனோகரன்
மட்டக்களப்பு.



2 ம் லெப். சந்திரன்
வேலாயுதம் ஈஸ்வரன்
முல்லைத்தீவு.



2-ம் லெப். குந்தவி
செல்லத்துரை விஜயலட்சுமி
சித்தன்கேணி [காரைநகர்]



வீரவேங்கை வரணி
வெள்ளையப்பன் சிவானந்தன்
முல்லைத்தீவு.

**வீரச்சாவு**

**09-04-93**

டித்துறைப் பகுதிக்கு வந்த புக்கார விமானங்கள் இரண்டு தடவைகள் வட்டமிட்டபின் வல்லைப் பகுதிச் சென்று தாக்குதலை நடாத்தியது.

வல்லையூடாக வந்த பயணிகள், உத்தியோகத்தர்கள், வியாபாரிகள் பலரும் தாக்குதலுக்கு இலக்காக நேரிட்டபோதிலும் பாலத்தினுள் மறைந்துகொண்டதினால் தப்பித்துக்கொண்டனர். எனினும் வியாபாரிகளது வாழைக்குலை, மரக்கறி போன்றவை சேதமடைந்தன.

பிற்பகல் ஒருமணிக்கு பின்னர் தாக்குதல்கள் குறைவடைந்தன. இருந்தபோதிலும் ஒரிரு ஆட்லறி எறிகணைகள் ஆங்காங்கு விழுந்து வெடித்தன. குண்டுவீச்சு விமானங்களும் பறந்து திரிந்ததையும் அவதானிக்க முடிந்தது.

(யோ)

மேற்படி இடமாற்றம் செய்யப்படுகிறது.

தற்போதைய பஸ் நிலையம் தொடர்ந்து இதே இடத்தில் இருந்தால் எதிர்கால நோக்கில் அதிக வாகனத் தடை ஏற்படும். மற்றும் நகரில் ஒரு பகுதி அபிவிருத்தியே சாத்தி

பஸ் வண்டிகளும் நகரப் பகுதியூடாகவே செல்லும் என்றும் நகரின் குறிப்பிட்ட பகுதிகளில் பஸ் தரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

**யாழ்.**

வைக்க மாவீரர் வீரவேங்கை சத்தியனின் தந்தை திரு. பரமசாமி அவர்கள்நாடாவை வெட்டி ஆரம்பித்துவைத்தார். வன்னி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. மனோவும், வர்த்தகர்களும், பொதுமக்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து விஸ்வமடு பூநகரி போன்ற தூரஇடங்களுக்கு வந்த தந்திகள் உடன் விநியோகிக்கப்பட்டன.

அமைக்கப்பட்டுள்ள விசேட மேடையில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்படும்.

இதனைத் தொடர்ந்து ஊர்வலமாக கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு புதைகுழிகளில் விதைக்கப்படும்.


## பெண் ஆசிரியர்கள் தேவை

1. புவியியல்
2. சித்திர ஆசிரியர்கள்
3. இலிகிதர்
4. பாலர் கல்வி ஆசிரியர்கள்

**அறிவுறுத்தல்கள்:-**

ஆசிரியர்கள் க. பொ. த. உயர்தரம், நான்கு பாடங்களிலும் சித்தியெய்தி இருத்தல் வேண்டும்

க. பொ. த. உயர்தரம், புவியியலில்விசேட சித்தியெய்தி இருத்தல் வேண்டும்.

**நேர்முகத் தேர்வு:-**

13-04-93 – காலை 8-30 மணிக்கு

**இடம்:-**

முத்துத்தம்பி ஆரம்ப பாடசாலைக்கு அருகாமையிலுள்ள மகளிர் அலுவலகம்

**நேர்முகத்தேர்வுக்கு:-**

உங்களது சகல சான்றிதழ்கள் அத்தாட்சிப் பத்திரங்களுடன் குறிப்பிடப்பட்ட திகதியில் நேரில் சமுகமளிக்கவும். (சி-6402)


## உள் வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**10.4.93**

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம்: 9021

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 26-0535, | 71-4984, | 41-4919. | 28-4672, | 28-9327, |
| 26-1658, | 40-2677, | 27-2034, | 26-2108, | 26-3518, |
| 26-6461. | 24-9856. | 41-6784, | 41-9175, | 41-9167, |
| 28-3233, | 26-3356, | 42-4126, | 27-5822, | 42-3267, |
| 26-7217, | 42-0488, | 42-1182, | 22-3641, | 41-9038, |
| 26-4139, | 40-4484, | 26-1690, | 27-1122, | 24-8710, |
| 41-8192, | 26-9779, | 24-6431, | 43-4065. | |

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 41-5973, | 27-9083, | 41-5015, | 24-6480, | 28-6996. |
| 24-4992, | 26-6984, | 26-1169, | 27-3803, | 24-4707, |
| 22-3088, | 28-1862, | 24-7375. | | |

## கண்ணீர் அஞ்சலி

கடமையின் போது அகாலமரணமெய்திய
இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை உப
தலைவரும் இணைய பிரதிநிதிகளில் ஒருவருமாகிய
திரு. கந்தையா புவனேந்திரன் அவர்களுக்கு

**எமது கண்ணீர் அஞ்சலி**

அவரைப் பிரிந்த அன்னாரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

நிர்வாகம் –அங்கத்துவ நிறுவனங்கள்,
யாழ். மாவட்ட அரச சார்பற்ற
நிறுவனங்களின் இணையம்.
யாழ்ப்பாணம்.

[ சி-6399 ]

## மரண அறிவித்தல்

## கந்தையா புவனேந்திரன்

(ஆசிரியர், யாழ். சன்மார்க்க வித்தியாலயம், உபதலைவர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ். கிளைத் தலைமையகம்)

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடம் இல. 91/05, இந்து மகளிர் ஒழுங்கையை வசிப்பிடமாக கொண்டவருமான திரு. கந்தையா புவனேந்திரன் அவர்கள் நேற்று அகால மரணமானார். அன்னார் இராஜகுமாரி (இலங்கை வங்கி, ஆஸ்பத்திரி வீதி, கிளை, யாழ்ப்பாணம்) அன்புக் கணவரும் ஸ்ரீஜீவனி (மாணவி வேம்படி மகளிர் கல்லூரி), கஜானந் ஆகியோரின் அருமைத் தந்தையும் எஸ். ஆர். கந்தையா (ஒய்வு பெற்ற ஆசிரியர்) இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் ஞானேந்திரன் (சவுதி), காலஞ்சென்ற சுபேந்திரன், திருமதி வசந்தி சிவதாசன் (ஆசிரியை, யாழ். கொக்குவில் இராமகிருஷ்ண), சுமதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ் சென்ற சி. ச. நடராசா, காமாச்சிஅம்மாள் (அமெரிக்கா)ஆகியோரின் அன்புமருமகனும் வைத்தியகலாநிதி இராஜகுமாரன்(இங்கிலாந்து),ஜெயகுமாரன்,திருமதி சி. ஜெயகுமாரி (அமெரிக்கா), யோககுமாரன் [அமெரிக்கா], யோககுமாரி [ஜேர்மனி], திரு. சிவதாசன் [தொழில்நுட்ப உத்தியோகத்தர் மன்னார்], திருமதி ஞா. கருணாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று [11 - 04 - 93] மாலை 3. 00 மணியளவில் கோம்பையன் மணல் மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி இ. புவனேந்திரன்
[மனைவி]
இலங்கை வங்கி,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

91/05,
இந்து மகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

[சி-6397]


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.